REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 பெப்ரவரி 13 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 92 இல. 38 | Tuesday 13, February, 2024 | 12 பக்கங்கள் | 50/-




# இலங்கை, இந்திய வர்த்தகத்தை ஒருங்கிணைக்கும் UPI கட்டண முறைமை அறிமுகம்




**10,000 வர்த்தக நிலையங்களில் கட்டண வசதி**

**நான்கு இலட்சம் வர்த்தகர்கள் பயனடைவு**



இலங்கை வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு QR குறியீடு ஊடாக ஒருங்கிணைந்த கட்டண முறை எனப்படும் UPI ஊடாக பணம் செலுத்தும் முறைமையை அறிமுகப்படுத்தும் நிகழ்வு, நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஒன்லைன் தொழில்நுட்பம் மூலம் இந்நிகழ்வில் இணைந்து கொண்டார். இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வேலைத் திட்டத்தின் மூலம் இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் மும்பையுடன் இலங்கை இணைக்கப்படும் எனவும் இதன் மூலம் இலங்கையில் உள்ள சுமார் 400,000 வர்த்தகர்கள் பயனடைவார்கள்

04

**இலங்கை – இந்திய – பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் தனித்துவமான சந்தர்ப்பம்: –ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க**

**உள்ளூர் பொருளாதாரங்களின் டிஜிட்டல் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கு ஒரு சிறந்த படி: –இந்திய பிரதமர் மோடி**

## மின் கட்டண பட்டியலில் நிவாரணம் வழங்க எதிர்பார்ப்பு

**உச்ச அளவில் வழங்க நடவடிக்கை**



லோரன்ஸ் செல்வநாயகம்

மின் கட்டணத்தில் நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதுடன் எதிர்வரும் 20 இல்,இது தொடர்பில் தகவல்களை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக எரிசக்தி மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 15 இல், நிறைவு பெறவுள்ளது.

04

## அமெரிக்க நிறுவனம், பெற்றோலிய சேமிப்பு முனையத்திற்கிடையில் ஒப்பந்தம்

லோரன்ஸ்செல்வநாயகம்



*Shell RM Parks* நிறுவனத்திற்கு சொந்தமான எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சேமிப்பு முனையத்தில் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் ஒப்பந்தமொன்று நேற்று

04

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப

## ஜனாதிபதியின் திட்டத்தை தவிர மாற்று வழிகள் கிடையாது



நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் பொருளாதார வேலைத் திட்டத்தைத் தவிர்த்து வேறு மாற்று வழிகள் இருப்பின், எந்தவொரு குழுவுடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரென போக்குவரத்து, மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச நிதி முகாமைத்துவம் தொடர்பில் போதிய அறிவு இல்லாத குழுக்களே மக்கள் முன்னிலையில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது வெறும் வார்த்தைகளால் முடியாத

04



பேலியகொடை மீன் சந்தை வளாகத்தில் சோலார் சிஸ்டம் பொருத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு சென்று கள நிலைமைகளை பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

## அதிகரிக்கும் போதை பாவனைகள் பாதுகாப்புத்துறை தீவிர கவனம்

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



நச்சுத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக, போதை மாத்திரைகளை பயன்படுத்தும் நிலை நாட்டில் அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, இது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாக

04

## சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிப்பு: 08 நாட்களில் 60122 பேர்



நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இம்மாதத்தின் கடந்த எட்டு நாட்களில் மாத்திரம் 60,122 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அத்துடன், கடந்த மாதத்தில்

04

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி இந்தியா பயணம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்று (12) இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அதிகாலை 2.50 மணியளவில் இந்தியன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் அவர், புதுடில்லி புறப்பட்டார்.

04

## தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்க இந்தியாவின் அக்கறை அவசியம்

**பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் கடிதம்**



திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது



தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்கவும் மற்றும் இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு,

04

## ஜனாதிபதி, பொதுத்தேர்தல்களுக்கு ரூபா 2000 கோடி அவசியம்

**தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பன இவ்வருடம் இடம்பெறவுள்ள நிலையில் இவ்விரண்டு தேர்தல்களுக்கும் 2000 கோடி ரூபா தேவைப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க இது தொடர்பில் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலை இவ்வருடத்தில் நடத்துவதற்கு

04

## அத்தியாவசிய பொருட்களின் விலைகளில் திருத்தம்

**சீனி, வெங்காயம், கிழங்குகளின் விலைகள் குறைப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



ஆறு அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்காக வெளியிடப்பட்டிருந்த உச்ச சில்லறை மற்றும் தொகை விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர்விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. அதிகார சபையின் தலைவர் சாந்த கிரியெல்ல இது தொடர்பில் தெரிவிக்கையில், செத்தல் மிளகாய், வெள்ளைச்சீனி, இறக்குமதிசெய்யப்படும்

04

## 2023: தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு அறிவிப்பு




2023 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிப்பது தொடர்பான அறிவிப்பை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.இந்த அறிவிப்பின்படி, புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 06க்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான மேன்முறையீடுகள் நாளை (13) முதல் ஏற்றுக்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

04

## பொதுச் செயலாளர் பதவியை பகிர்ந்தளிக்க பேச்சுவார்த்தை



இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை பகிர்ந்தளித்து இணக்கப்பாட்டுடன் செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தெரிவான பொதுச்செயலாளர் குகதாசனுடன் முன்னெடுக்கவுள்ள சமரச பேச்சுவார்த்தைகள் குறித்து நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

“இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு குறித்து இனிமேல் எந்த வாக்கெடுப்பும்

04

## வரண்ட காலநிலையால் தோல் வியாதி ஆபத்து



நாட்டில் தற்போது நிலவும் மிகவும் வரண்ட காலநிலை காரணமாக, தோல் நோய்கள் அதிகரித்து வருவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையானது சிறுவர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள சிறுவர் களுக்கு கூட, இந்நாட்களில் குளிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவைகளாவது குளிப்பதற்கு சந்தர்ப்பம்

04

## கலையுணர்வுகள் கவலையடையும் வகையில் அமைவதை ஏற்க முடியாது



**முற்றவெளி சம்பவம் தொடர்பில் மனோ கணேசன்**

யாழ்ப்பாணத்தில் தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிஷ்ட சம்பவங்கள், இலங்கை தமிழக கலாசார உறவுகளுக்கு பாதகமாக அமைந்து விடக்கூடாதென, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார். இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது, பிரமாண்டமான கலை நிகழ்வுகள் நடத்தப்படும் போது, அவற்றுக்கான விதிமுறைகளை அமுலாக்குவது அவசியம். தமிழக சினிமா ஒரு பிரமாண்டமான பணம்

04

# ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் ஸ்தாபகர் தின நிகழ்வு










பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் நாற்பெரும் விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் (11) கலாபீட மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. நளீமிய்யா கலாபீட நிர்வாக சபை மற்றும் ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலயம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்த இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நளீமிய்யா கலாபீட ஆளுநர் சபை உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக கலாபீட நிர்வாக சபைத் தலைவர் யாகூத் நளீம், சிறப்பு அதிதியாக கலாபீட முதல்வர் உஸ்தாத் அகார் முஹம்மத் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் ஐம்பது வருட கல்விப்பணி நினைவுத் தபால் முத்திரை வெளியீடு, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் சொந்த நிதியில் நளீமிய்யாவுக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட சூரிய சக்தி மின்சாரம் 'SOLAR POWER PROJECT' அங்குரார்ப்பணம், கலாநிதி அரபாத் கரீம் (நளீமி) எழுதிய "ஜாமிஆ நளீமிய்யா" எண்ணக் கருவும் உருவாக்கமும் நூல் வெளியீடு மற்றும் நிறுவுனர்கள் தின பிரதான நிகழ்வின் கௌரவிப்பும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் உலமாக்கள், புத்திஜீவிகள், பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், நளீமிய்யா ஆளுநர் சபை உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாயிஸ் முஸ்தபா உட்பட சீனன்கோட்டை பள்ளிச்சங்க பிரதிநிதிகள், ஊர் பிரமுகர்கள், கலாபீட மாணவர்கள், விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

(அஜ்வாத் பாஸி, அஷ்ரப் ஏ சமட்)

# ஜனாதிபதி ரணில் தலைமையிலான ஆட்சியையே இன்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்

## மாதம்பையில் அகிலவிராஜ் காரியவசம்

( நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீது நாட்டுமக்கள் நீண்ட கால திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியையே தற்போது எதிர்பார்த்து நிற்கின்றனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியையே நாட்டுமக்கள் எதிர்பார்க்கின்றனர். எனவே, நாம் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அகில விராஜ் காரியவசம், மாதம்பையில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட செயற்குழு கூட்டம் சனிக்கிழமை ( 10 ) மாதம்பை கூட்டுறவுச் சங்க கட்டட வளாகத்தில் சிலாபம் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஸ்டீவன் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது.

புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டிய, மாதம்பை, ஆராச்சிக்கட்டுவ, சிலாபம் மற்றும் வென்னப்புவ ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அகில விராஜ் காரியவசம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீண்ட கால அரசியல் அனுபவமிக்க ஒரு தலைவர். எமது நாடு மிகவும் சிக்கலான பொருளாதார நிலையில் இருந்தபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது நாட்டை மீட்டெடுத்தார் . படிப்படியாக தற்போது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. நாம் அதனை பலப்படுத்த வேண்டும். புத்தளம் மாவட்டத்தின் கிராமங்கள் அபிவிருத்தி அடைய வேண்டும் . நாம் ஐக்கிய தேசியக் கட்சியையே பலப்படுத்த வேண்டும் . ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ்



எமது நாடு அபிவிருத்தி அடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நாம் கிராமங்கள் தோறும் இந்த செய்தியை மக்களுக்கு எத்தி வைக்க வேண்டும். இதற்காகவே நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம் . ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஜனாதிபதியின் மீது சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர். எமது நாட்டின் அபிவிருத்திக்கு சர்வதேச நாடுகள் பாரியளவில் ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றன . இதனை நாம் கண்கூடாக காண்கிறோம். இதனால் எமது நாடு அபிவிருத்தி அடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதனைக் கருத்தில் கொண்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்துவோம். " என்று கூறினார்.



அயோத்தி ராமர் கோயில் திறக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவிக்கும் நோக்கில் டில்லி தமிழ் சங்கத்தின் பொதுச்செயலாளர் இரா.முகுந்தன் அண்மையில் இந்திய மத்திய தகவல் ஒலிப்பரப்புத்துறை, மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகனை டில்லியிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தார். இதன் போது டில்லி தமிழ் சங்கத்தின் பொருளாளர் அருணாச்சலம், இணைச்செயலாளர் திருமதி உமா சத்தியமூர்த்தி, சமூக பாதுகாப்பு தேசிய நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ஆர். கிரிராஜ் ஆகியோர் அவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தபோது எடுத்த படம்.

# புத்தளம் பாத்திமா அஹதிய்யாவில் வரலாற்று முக்கியத்துவ நிகழ்வு



(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் பாத்திமா அஹதிய்யா பாடசாலையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (11) காலை நடைபெற்றது.

பாத்திமா அஹதிய்யா பாடசாலைக்கு 300 மாணவர்கள் மும்மொழிகளிலும் முதற்கட்டமாக அனுமதிக்கப்பட்டனர்.

புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் வழிகாட்டலின் பிரகாரம் பாத்திமா அஹதிய்யா பாடசாலையின் அதிபர் எம்.ரீ. மபாஹிரா மற்றும் அஹதிய்யா பாடசாலை முகாமைத்துவக் குழுவினர், சிறந்த கல்வியியலாளர்களைக் கொண்ட முஅல்லிமாக்கள் ஆகியோரின் அயராத முயற்சியின் விளைவாகவும் பெற்றோரது முழுமையான பங்களிப்புடனும் ஆரம்பமான பாத்திமா அஹதிய்யாவில் அழகான சீருடையுடன் மாணவர்களின் வருகையும் அமைந்திருந்தது. காலைக் கூட்டத்தில் விஷேட வளவாளர்களின் சொற்பொழிவுகள் மற்றும் உடற்பயிற்சி என்பன நிறைவடைந்த பின்னர் ஆசிரியர் குழாம் இனிப்புப் பண்டங்களை வழங்கி மாணவர்களை வரவேற்றமை விஷேட அம்சமாகும். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கல்வி பயில மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பாத்திமா அஹதிய்யா பாடசாலையின் தலைவி ஸரீனா பர்வீன், அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தின் தேசிய பிரதித் தலைவர் பாரூக் பதீன், புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் பொருளாளர் ஏ.ரீ.தாஹிரா தஸ்னீம், அஹதிய்யா பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் முகாமைத்துவ குழுவினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



பாணந்துறை வேறவத்த ஏபீஸீ பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் 'டேடா புட்ஸால்' விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத்தின் தலைவரும் பாணந்துறை பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான எம்.என்.எம்.தாஹிர்பாஸி வெற்றியீட்டிய சிறுவனுக்கு பரிசு வழங்குவதையும் பாடசாலை அதிபர் சாமிலா ஆஸிபும் அருகில் காணப்படுகிறார்.

( படம் : பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## அநுராதபுரம் மாவட்டத்தில்...

# சிறுபோகத்தில் பாரியளவில் பயறுச்செய்கை மேற்கொள்ள திட்டம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் எதிர்வரும் சிறுபோகத்தின் போது பாரிய அளவில் பயறு செய்கையினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக மாவட்ட விவசாய பணிப்பாளர் தேனுவர தெரிவித்தார்.


மேற்படி திட்டம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மையப்படுத்தி எதிர்வரும் சிறுபோகத்தின் போது செய்கை பண்ணுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டிலும் பயறுச் செய்கையின் மூலம் விவசாயிகள் அதிக இலாபத்தினை ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பயறு செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளது பெயர் விபரங்கள் தற்சமயம் விவசாய திணைக்களத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் மாவட்டத்தின் அனைத்து கமநல சேவை மத்திய நிலையங்கள் ஊடாக பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விருப்பமுடைய விவசாயிகள் தமது விபரங்களை தமது பகுதிக்கு பொறுப்பான கமநல சேவை அதிகாரிகளிடம் வழங்க முடியும்.

பயறுச் செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு தேவையான சிறந்த இன செய்கைக்குரிய விதைப் பயறினை விவசாயத்திணைக்களத்தினால் இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தேனுவர மேலும் தெரிவித்தார்.

# கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க நரேந்திரனின் உலோகச் சிலை ஜனாதிபதியால் திறப்பு





கொள்ளுபிட்டி வாலுகாராம விகாரையில் நிறுவப்பட்டுள்ள கீர்த்தி ஸ்ரீராஜசிங்க நரேந்திரனின் உலோகச் சிலையை,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (12) திறந்து வைத்தார்.

கொள்ளுப்பிட்டி வாலுகாராம உட்பட பஞ்ச மகா விகாரை விகாராதிபதி விசித்ர பானக வண. மஹரகம நந்த நாயக்க தேரரின் 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இந்த உலோகச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

தாய்லாந்திலுள்ள மகாசங்கத்தினர் உள்ளிட்ட தாய்லாந்து நன்கொடையாளர்களின் ஆதரவுடன் இந்த உலோக சிலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து, கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க நரேந்திரனின் உலோகச் சிலையும் ஜனாதிபதி திறந்து வைத்தார்.

இதனுடன் இணைந்ததாக விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வண. வெலிவிட்ட சரணங்கர சங்கராஜ தேரரின் சிலையும் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இதில், ஸ்ரீ கல்யாணி சாமசிரி தர்ம மகா சங்க சபை மகாநாயக்க தேரர் மல்வானே பஞ்சாசரபிதான தேரரினால் மத அனுஷ்டானங்கள் நிகழ்த்தப்பட்டன. இங்கு வண. மஹரகம நந்த நாயக்க தேரர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இலங்கை மற்றும் தாய்லாந்தில் பௌத்த மதத்தின் மேம்பாட்டுக்காக விசேட பங்காற்றிய உடோம் தம்மானுகுல் விபன்பாவ் தேரருக்கும், துறவி லுவாம் பு ஸ்ரீஷி கெத்கேவ் சார்பில் பேராசிரியர் நுவான் காவிந்த விஜேசிங்கவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நினைவுப் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஜனாதிபதிக்கும் விசேட நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

## இடைநடுவில் நிறுத்தப்பட்ட வீடமைப்பு திட்டங்களை இவ்வருடம் பூர்த்தியாக்க முடிவு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

நிர்மாணப் பணிகள் முடிவுறாத நிலையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான நிதியை ஒதுக்க தீர்மானித்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் இதுவரை நிர்மாணப் பணிகள் நிறைவுபெறாத வீடமைப்புத் திட்டங்களை இந்த வருடத்திற்குள் நிறைவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாறு இவ்வீடுகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. வீட்டுக்கடன் மற்றும் உதவி வேலைத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.02.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5387
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,432,672.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 5 6 8 1 6 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3629
சீட்டிழுப்பு திகதி 2024.02.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,839,377.12
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 37 49 58 73
விசேட எழுத்து A
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 80133

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1735
2024.02.11
42426
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.423,575,830.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கங்கள் 29 33 37 75

Lucky 7 VIP
திகதி 2024.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 0213
ஆங்கில எழுத்து U
L7 எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 1 3 2 2 0 9
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.24,963,714.76

ராசி சுப பலன்
திகதி 2024.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 696
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,207,598.04
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 35 36 42 53
தனயோக இலக்கம் 20002
நாளுக்கான விதி எண் 19

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1417
2024.02.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 135,112,336.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 22 50 57 70
விசேட எழுத்து H
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 13883




இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியை நேற்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் சந்தித்து கலந்துரையாடினார்.தூதரகத்தில் நடந்த இச்சந்திப்பில், இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சித் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

### ஐந்து வருடமாக செலுத்தாதிருந்த

## உரக் கடனில் பெரும்பகுதி மீளச் செலுத்தப்பட்டுள்ளது

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



ஐந்து வருட காலமாக செலுத்தமுடியாதுபோன உர வகைகளுக்கான கடனான 23,000 மில்லியனில் 93 வீதம் மீளச் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு வரை ஐந்து வருடங்களுக்கு உர வகைகளை கடனுக்கு பெற்றுள்ள நிலையில் விவசாய அமைச்சு, தனியார் துறையினருக்கு 23,000 மில்லியன் ரூபாவை செலுத்தவேண்டியிருந்தது. அதில் 93% தற்போது செலுத்தப்பட்டுவிட்டதாகவும், தற்போது 5,000 மில்லியன் ரூபாவே நிலுவையாகவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மீதமான அந்த தொகையை வழங்குவதற்கு நிலவும் சட்ட ரீதியான சிக்கல்களை நிறைவுசெய்து விரைவாக அதனை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஒன்லைன் முறைமையில்

## கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை சேர்க்க முடிவு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்களை இணைக்கும் செயற்பாடுகளை ஒன்லைன் முறைமையின் கீழ் மட்டும் முன்னெடுப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த முறைமையின் கீழ் விண்ணப்பதாரர்கள்,தம்மை கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்குவதற்கு தகைமையுடையவர்களா, அவ்வாறு தகைமை பெற்றுள்ள பாடங்கள் என்ன என்பது தொடர்பான தகவல்களை விரைவாக தெரிந்துகொள்வதற்கு உதவும் வகையிலேயே இந்த நடைமுறையை செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்காக, புதிய தரவுத் தொகுதியை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் தகைமையில்லாதவர்களை சுயமாக வெளியேற்றும் முறைமை அதன்மூலம் முன்னெடுக்கப்படுமென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, இம்முறை ஒரே நேரத்தில் இரண்டு மாணவர்கள் குழுக்களை இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்திற்கிணங்க, விண்ணப்பங்களை கோருவதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அச்சுறுத்தல்களால் எனது அரசியல் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



வீட்டிற்கு தீவைத்தும் சொத்துக்களை அழித்து அச்சுறுத்தல் விடுத்தும், தமது அரசியல் பயணத்தை எவராலும் தடுத்துநிறுத்த முடியாதென நகர அபிவிருத்தி வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

செய்நன்றி மறவாத கம்பஹா மக்கள் உள்ளவரை தமது அரசியல் பயணத்தில் ஒரு அடியையேனும், தாம் பின்வைக்கத்தயாரில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் 1200 பேருக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்களை கையளிக்கும் நிகழ்விலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், பல்வேறு அச்சுறுத்தல்கள் பல்வேறு விதத்தில் எனக்கு விடுக்கபட்டன. இருந்தபோதும் எனது பகுதி மக்கள் எமக்கு ஆதரவாகவே உள்ளனர்.இவர்கள் இருக்கும்வரை வெற்றிகரமாக தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வில் 1200 பாடசாலை மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 7500 ரூபா பெறுமதியான பாடசாலை புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


NLB

## தேசிய லொத்தர் சபை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**தேசிய லொத்தர் சபைக்கு 301 எண்ணிக்கையான லொத்தர்சீட்டு கருமபீட ஸ்டிக்கர்களை அச்சிடுதல், வழங்குதல், ஒட்டுவதற்கான பெறுகை**

01. தேசிய லொத்தர் சபைக்கு 301 எண்ணிக்கையான லொத்தர்சீட்டு கருமபீட ஸ்டிக்கர்களை அச்சிடுதல், வழங்குதல், ஒட்டுவதற்காக தகுதி மற்றும் தகைமைவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய லொத்தர் சபையின் (NLB) சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் இப்போது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

02.

| உருப்படி | விலைக்கோரல் இலக்கம் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | ஆவணக் கட்டணம் (ரூபா) (மீளளிக்கப் படாதது) (VAT சகிதம்) |
|---|---|---|---|---|
| லொத்தர்சீட்டு கருமபீட ஸ்டிக்கர்கள் | NLB/PRC/09/CS/20230129 | 301 | 195,000.00 | 1,500.00 |

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

04. விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் விலைக்கோரலுக்கு தகுதியான வழங்குநராவதற்கு பின்வரும் மேலதிக தகுதிகள் சகிதம் உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வழங்குநராக இருத்தல் வேண்டும்.

- செல்லுபடியான வியாபாரப் பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
- இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் 02 வருட கால முன்னனுபவம். (விலைமனுக்களுடன் சாட்சிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
- VAT பதிவுச் சான்றிதழ் (VAT ஏற்புடையதாகவிருந்தால்)

05. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை, 1ஆம் மாடியின் பெறுகை பிரிவு, பெறுகைக்கான உதவி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0114607020/0114607021/0114607023) மற்றும் மேற்கூறிய முகவரியில் **மு.ப. 9.00** மணியிலிருந்து **பி.ப. 2.30 மணி** வரையும் எந்தவொரு வேலை நாளிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மீளளிக்கப்படாத **1,500.00 ரூபா** (VAT சகிதம்) கட்டணத்தைச் செலுத்திய பின்னர், **2024-02-13**ஆம் திகதியிலிருந்து **2024-02-26**ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் **மு.ப. 9.00** மணியிலிருந்து **பி.ப. 2.30** மணி வரையும் கீழ்யுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை வியாபாரக் கடிதத் தலைப்புத் தாளில் இட்டு சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை **2024-02-27**ஆம் திகதியன்று **பி.ப. 2.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், கொழும்பு-01, என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை, 6ஆம் தள கூட்ட அறையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்படி 02ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை, தலைவரை பயனாளியாகக் குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் விலைக்கோரல் பிணை முறியானது **2024-02-27**ஆம் திகதி முதல் **2024-06-10**ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் காலத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

08. வெற்றிகரமான விலைமனுதாரர் ஒப்பந்தப் பெறுமதியின் 10% செயலாற்றுகை பிணையாக வழங்குதல் வேண்டும். இந்த செயலாற்றுகை பிணை முறியானது 13 மாதங்கள் வரையில் செல்லுபடியாகும் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

09. ஆவணங்களை முத்திரைக்குறியிடப்பட்ட உறையொன்றில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் **''தேசிய லொத்தர் சபைக்கு 301 எண்ணிக்கையான லொத்தர்சீட்டு கருமபீட ஸ்டிக்கர்களை அச்சிடுதல், வழங்குதல், ஒட்டுவதற்கான விலைக்கோரல்''** (**NLB/PRC/09/CS/20230129**) எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

10. விலைமனுதாரர்களால் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விலைமனுக்களை ஒப்படைத்தல் மற்றும் / அல்லது விலைமனுக்கள் தொலைந்து போதல் அல்லது தபாலில் ஏற்பட்ட தாமதம் தொடர்பில் ஏற்பட்ட எந்தவிதமான கிரயம் அல்லது செலவுகளுக்கு தேசிய லொத்தர் சபை பொறுப்புகூற மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல.: 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை,**
**கொழும்பு-01.**

## இலங்கை, இந்திய வர்த்தகத்தை...

எனவும் தெரிவித்தார். இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு இதுவொரு சிறந்த சந்தர்ப்பம் என்றும் அவர் தெரிவித்தார்

மட்டுமன்றி இந்திய இலங்கை பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இது ஒரு தனித்துவமான வாய்ப்பாக உள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

NNPCI International Payments Limited மற்றும் இலங்கை LankaPay நிறுவனம் என்பன இணைந்து முன்னெடுக்கும் இந்த வேலைத்திட்டத்தை விரைவாக விஸ்தரிக்கும் நோக்கத்துடன் 10,000 வர்த்தக நிலையங்களில் இந்த கட்டண முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வசதியை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம் இந்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை மார்ச் 2024க்குள் 65,000 ஆக உயர்த்தப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது அண்மைய உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது வெளியிட்ட " தொலைநோக்கு அறிக்கையின்" பிரகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஒன்றிணைந்த கொடுப்பனவு முறைமை (UPI) அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், LankaQR ஊடாக UPI பரிவர்த்தனைகள் அறிமுகப்படுத்தப்படும். ஏற்கனவே உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு உகந்த முறையான LankaQR ஆனது QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் பணம் செலுத்துவதை எளிதாக்குகிறது.

அதன்படி, UPI கைபேசி செயலியை தடையின்றி பயன்படுத்தி இலங்கை முழுவதும் உள்ள வர்த்தக சமூகத்திற்கு கொடுப்பனவுகளை செலுத்த முடியும். மேலும் இந்த ஏற்பாடு நாட்டில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இந்திய இலங்கை பொருளாதார உறவுகளையும் வலுப்படுத்தும்.

இலங்கையிலுள்ள சுமார் 20 உள்ளூர் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இதற்கு தங்கள் ஆதரவை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதிகளுக்கு இந்த சேவையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது பிரதமர் நரேந்திர மோடியுடன், தாம் வெளியிட்ட " தொலைநோக்கு அறிக்கையை" தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மேலும், அண்மையில் பேர்த்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகவும், தொலைநோக்கு அறிக்கையை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து திருப்தியடைவதாகவும், மொரீஷியஸ் அரசுடனான ஒத்துழைப்பு மேலும் விரிவடையும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை மற்றும் மொரிஷியஸை UPI கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கும் இலக்கை அடைவது பரஸ்பர நன்மைகளைப் பெறுவதற்கும் உள்ளூர் பொருளாதாரங்களின் டிஜிட்டல் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் ஒரு படியாகும் என்றார்.

ஆபிரிக்காவிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட Rupee அட்டையின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவிற்கு வருகை தரும் மொரிஷியஸ் சுற்றுலாப் பயணிகளின் வசதியை அதிகரிப்பதிலும், பண நோட்டுகள் மற்றும் நாணயங்க

ளைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தைக் குறைப்பதிலும் அது வகிக்கும் பங்கை வலியுறுத்தினார்.

பூகோள தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய இந்தியப் பிரதமர், "அண்டை நாடுகளுக்கு முதலிடம்" என்ற கொள்கையின்படி, அண்டை நாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளில் இந்தியா ஆதரவளிக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் ஆற்றிய பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்த பிரதமர் மோடி, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த பங்களித்த மூன்று நாடுகளின் மத்திய வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பையும் பாராட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கு மேலும் குறிப்பிட்டதாவது,

இந்திய இலங்கை உறவில் இது மற்றொரு முக்கியமான தருணமாக கருதுகிறேன். சில வாரங்களுக்கு முன்பு நீங்கள் இராமர் கோயிலை திறந்து வைத்தீர்கள். அதற்கு நான் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறேன். இந்தத் திட்டம் நமக்கிடையேயான பொருளாதார மற்றும் கலாசார உறவை பிரதிபலிக்கிறது.

நமது இரு நாடுகளுக்கும் இடையே பல்லாயிரம் வருடங்களுக்கு மேலாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்போது பயன்படுத்திய நாணயங்கள் இன்றும் நமது அருங்காட்சியகங்களில் உள்ளன. மேலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான தென்னிந்திய நாணயங்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எனவே, நாம் அந்த உறவை தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்துவதையே தற்பது செய்கிறோம். எமக்கு இனி நாணயங்கள் தேவையில்லை. லங்கா QR மற்றும் NIPL இணைந்துள்ளன.

அத்துடன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதனால் எமது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இம்முறையைப் பயன்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியும்.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் மற்றும் இலங்கைக்கும் மும்பைக்கும் இடையிலான பரிவர்த்தனைகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகிறன. குறிப்பாக வர்த்தகர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். இதில் சுமார் 400,000 வர்த்தகர்கள் தொடர்புபட்டுள்ளதாக கருதுகிறேன்.

எனவே, இந்திய இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வாய்ப்பாக இதனை அடையாளப்படுத்தலாம். எனது அண்மைய உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது, இந்தியப் பிரதமரும் நானும் வெளிப்படுத்திய "தொலைநோக்கு அறிக்கையை" செயல்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அண்மையில் பேர்த்தில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடன் நான் கலந்துரையாடினேன். இந்த வேலைத்திட்டத்தில் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து நாங்கள் திருப்தி அடைகிறோம். மேலும் இந்தச் செயல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், புதிய உறவுகளை கட்டியெழுப்பக்கூடிய ஏனைய துறைகளை அடையாளம் காண வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை இது மகிழ்ச்சியான விடயம். இந்த திட்டத்தின் மூலம், மொரிஷியஸுடனும் இணைந்துள்ளோம். நாம் தீவு நாடுகளாக இருப்பதால் இந்த திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்று நம்புகிறேன். மேலும், நமது இரு நாடுகளுக்கும் இடையே வரலாற்று ரீதியான உறவு காணப்படுகிறது. மொரிசியஸுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதற்கு இலங்கை எதிர்பார்க்கிறது. மேலும், பேர்த்தில் மீண்டும் இந்திய வெளியுறவு அமைச்சருடன் எங்களது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தேன். இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பிரதமர் மோடிக்கு மீண்டும் நன்றி தெரிவிக்கிறேன்." என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்



(13.02.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
தொழில் ரீதியான பயணம் மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் சிலருக்கு எதிர்பாராமல் இடமாற்றம் ஏற்படக்கூடும்.

**ரிஷபம் :**
எண்ணிய எண்ணங்கள் நிறைவேறுவதில் இடையூறு வரலாம். உத்தியோகத்தில் சிலருக்கு செல்வாக்கான பொறுப்பு கிடைக்கும்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் அலுவலகத்தில் இருந்து கடன் தொகையை பெறுபவர். அதை கொண்டு பாதையில் நின்ற பணிகளை தொடர்வீர்கள்.

**கடகம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைத்து சில சலுகைகளை பெறுவர்.

**சிம்மம்:**
பொறுப்புகளில் கவனம் செலுத்தாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக வேண்டியது இருக்கும்.

**கன்னி:**
வீடு மனை வாங்குவதில் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவு இருக்கும்.

**துலாம்:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ் செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்திலையே செல்வாக்கான பொறுப்புக்கள் வந்து சேரும்.

**விருச்சிகம்:**
உறவினர்களில் சிலர் உங்கள் மூலம் காரியங்களை சாதித்துக் கொள்ள முற்படுவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பொறுப்புகளால் அவதிக்குள்ளாவர்.

**தனுசு:**
நெருங்கிய நண்பர்கள் உறவினர்களிடம் ஆக்குவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மகரம்:**
பிரிந்த ஒருவர் உங்களை மீண்டும் தேடி வரக்கூடும் மீன் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:**
சில பிரச்சினைகளில் முடிவு காண விட்டுக்கொடுத்த செல்ல நேரிடும். உத்தியோகத்தர்கள் செய்த வேலைகளில் ஏற்பட்ட தவறுகளை சரி செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

**மீனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்பு அதிகரித்து சிரமத்துடன் பணியாற்றும் சூழல் உருவாகும்.

## ஜனாதிபதியின் திட்டத்தை...

செயல் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அமைச்சர்;

2023 ஆம் ஆண்டு வரி விதிப்பின் மூலம் பெறப்பட்ட அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாவாகும். நிவாரணங்கள், சம்பளம் மற்றும் அரச கடன்கள் ஆகியவற்றுக்காக திறைசேரியிலிருந்து செலவிடப்பட்ட தொகை 4394 பில்லியன் ரூபாவாகும்.

அரச செலவில் எப்பகுதி குறைக்கப்படும் என்பதை மாற்றுக் கருத்துள்ள குழுக்கள் மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகள் இல்லை என ஜனாதிபதி தனது சிம்மாசன உரையில் குறிப்பிட்டார். 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பற்றி மக்களுக்குத் தெரியும்.

அதிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த வேலைத் திட்டத்தினால் இலங்கையின் பொருளாதாரம் இன்று சாதகமான நிலையை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டு தொடர்பில் குறிப்பிடுவதாயின், வரிப் பணம் உட்பட மொத்த அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாவாகும்.

அதற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 1550 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்தினால் 923 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்தினால் 169 பில்லியன் ரூபாவும், மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் 20 பில்லியன் ரூபாவும் பங்களிப்புச் செய்யப்பட்டுளன. இந்தத் தொகை திறைசேரிக்குக் கிடைத்த வருமானம் ஆகும். ஆனால் கடந்த வருடம் திறைசேரியால் செலவிடப்பட்ட பணத்தின் அளவு 4394 பில்லியன் ரூபாவாகும்.

நிவாரணங்கள், அரச கடன்கள், அரச ஊழியர்களுக்கான சம்பளம் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், திறைசேரியில் இருந்து 13,292 பில்லியன் ரூபா உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக எரிபொருள் வழங்கப்படுகிறது. எரிவாயு வரிசைகள் இல்லை. தடையற்ற மின் விநியோகம் இருக்கிறது. அரச ஊழியர்களுக்கு குறித்த திகதியில் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த செயற்பாடுகள் மூலம் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டத்திற்கு மாற்றாக வேறுவழி எதுவும் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது என்றார்.

## மின் கட்டண பட்டியலில்...

இதற்கிணங்க மின் கட்டணங்களில் வழங்கக்கூடிய நிவாரணம் தொடர்பில் எதிர்வரும் (20) தகவல்களை வெளியிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மின் கட்டண திருத்தத்தின்போது உச்சளவு நிவாரணத்தை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## தமிழக மீனவர்களின்...

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். தமிழக முதல்வர் கடந்த வெள்ளிக்கிழமை (09) எழுதியுள்ள கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது;

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இதனால், தமிழக மீனவர்களின் வாழ்வாதார உரிமைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

கொவிட்19 பெருந்தொற்று காலத்தைத் தவிர்த்து, கடந்த சில ஆண்டுகளில் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளது. பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் பயன்படுத்தி வரும் மீன்பிடிப் பகுதிகள் இலங்கைக் கடற்படையினரால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மட்டுமன்றி மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ள அவர்களின் கலாசார மற்றும் சமூகக் கட்டமைப்புக்கு பெருத்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

2023ம் ஆண்டில், இலங்கைக் கடற்படையினர் 243 தமிழக மீனவர்களை கைது செய்துள்ளதுடன், 37 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். கடந்த 28 நாட்களில் மட்டும், 6 சம்பவங்களில், 88 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 12 மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளை அரசுடமையாக்க இலங்கை அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கும் வகையில், 2018ம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் கடல் சார் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பாக, முன்னரே, சுட்டிக்காட்டியிருந்தேன். இலங்கை அரசின் இந்நடவடிக்கையால், நல்ல நிலையில் உள்ள, பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை மீட்டு, தமிழகத்துக்குக் கொண்டு வர முடியாதுள்ளது.

எனவே, பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப் பட்டுள்ள இந்திய மீன்பிடிப் படகுகளைத் திரும்பப் பெற்றிடவும், படகுகளை உடனடியாக விடுவித்திடவும் ஏதுவாக, மேற்படி சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டும். இவ்வாறு தமிழக முதல்வரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி...

இந்தியாவின் விசேட அழைப்பின் பேரிலேயே முன்னாள் ஜனாதிபதி மைத்திரி இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்திய விஜயத்தை முடித்த பின்னர் அங்கிரிருந்து அவர், அமெரிக்கா செல்லவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாப்பயணிகளின் வருகை...

2 இலட்சத்து 82 ஆயிரத்து 53 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் அச்சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிலிருந்தே அதிகளவிலான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர். ரஷ்யாவிலிருந்து 8,755 சுற்றுலாப்பயணிகளும், இந்தியாவிலிருந்து 8,369 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 4,423 சுற்றுலாப்பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா சபையின் அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

## அத்தியாவசிய பொருட்களின்...

நெத்தலி, இறக்குமதியாகும் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு, மைசூர் பருப்பு ஆகியவற்றின் சில்லறை மற்றும் தொகை விலைகளே இந்த திருத்தத்தின் மூலம் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், செத்தல்மிளகாய் ஒருகிலோ 840 ரூபா, வெள்ளைச் சீனி ஒரு கிலோ 262 ரூபா, இறக்குமதி செய்யப்படும் நெத்தலி ஒரு கிலோ 850 ரூபா, இறக்குமதிசெய்யப்படும் பெரிய வெங்காயம் 310 ரூபா, உருளைக்கிழங்கு ஒரு கிலோ 110 ரூபா, மைசூர் பருப்பு ஒரு கிலோ 290 ரூபா என தொகை விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, செத்தல் மிளகாய் ஒருகிலோ 970 ரூபா முதல் 1100 ரூபா வரை, வெள்ளைச்சீனி 275 310 ரூபாவரை இறக்குமதிசெய்யப்படும் நெத்தலி ஒரு கிலோ 1959

1250 வரை இறக்குமதிசெய்யப்படும் பெரிய வெங்காயம் 330 400 வரை உருளைக்கிழங்கு ஒரு கிலோ 150 முதல் 200 வரை மைசூர் பருப்பு ஒரு கிலோ 310 380 வரை சில்லறை விலை பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க நிறுவனம்,...

கைச்சாத்திடப்பட்டுள்ளது. உள்நாட்டு எரிபொருள் சந்தையை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறந்துவிட்ட பின்னர், இலங்கையில் முதலீடு செய்த அமெரிக்காவை தளமாகக் கொண்ட Shell RM Parks நிறுவனத்திற்கும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்திற்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொலன்னாவையிலுள்ள பெற்றோலிய சேமிப்பு முனைய நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08 ஆம் திகதி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனைய நிறுவனம் மற்றும் மின் சக்தி, எரிசக்தி அமைச்சு ஆகியன இது தொடர்பான முன்னோடி உடன்படிக்கையில் 2023.07.08 இல், கைசாத்திட்டிருந்தன.

இந்நிலையில் உரிய எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அமைச்சர் கஞ்சன விஜேசேகர பணிப்புரை விடுத்திருந்தார். இந்நிலையிலே, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## கலையுணர்வுகள் கவலையடையும்...

கொழிக்கும் வியாபாரம். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. இதனால்தான் புலம்பெயர் இலங்கை தமிழர்களும் அதில் உள்ளனர் . போர் நிகழ்ந்த பூமியில், ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்" இவற்றைக் கருத்திற்கொண்டு யாழ் மாவட்ட எம்பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸ், யாழ் மாநகரசபை, சிவில் சமூகம் என்பன ஒன்றுபட்டு பேசித் தீர்மானிக்க வேண்டும். கலை நிகழ்ச்சிகள் வன்முறைகளாக மாறிய கடந்தகால சம்பவங்களை பாடமாகக் கொண்டுதான், ஏற்பாட்டாளர்கள் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். உள்ளூர் கலைஞர்களை புறமொதுக்கும் ஏற்பாடுகள் உள்நாட்டில் வரவேற்பை பெறுமா என,யோசிக்குமளவுக்கு யாழ், முற்றவெளி கச்சேரி நிலைமைகள் மாறியமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வரண்ட காலநிலையால்...

வழங்கப்பட வேண்டும். தோல் நோய்கள் இருப்பின் காலையிலும் இரவிலும் சுமார் 20 நிமிடங்களேனும் நீரில் மூழ்கி இருப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்த முடியும் எனவும் வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

## அதிகரிக்கும் போதை பாவனைகள்...

தெரிவித்த அவர் அண்மைய நாட்களில் 3,63,438 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை,யுக்திய நடவடிக்கையின் கீழ் கடந்த 24 மணிநேரத்தில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 625 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 545 சந்தேக நபர்களும், குற்றப் பிரிவில் குறிப்பிடப்பட்ட பட்டியலில் காணப்படும் 80 சந்தேக நபர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன் 160 கிராம் ஹெரோயின், 152 கிராம் ஐஸ், 10 கிலோகிராம், 745 கிராம் கஞ்சா மற்றும் 683 போதை மாத்திரைகளும் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

குற்றப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 80 சந்தேக நபர்களில் 03 சந்தேகநபர்கள் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனவும், 74 பேர் போதைப்பொருள் அல்லாத குற்றங்கள் தொடர்பாக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுச் செயலாளர் பதவியை...

நடைபெறாது.பொதுச் செயலாளர் பதவியை குகதாசன் மற்றும் சிறிநேசன் ஆகியோருக்கு தலா இரண்டு வருடங்கள் என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்க பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.கடந்த (11) நடத்தப்பட்ட பேச்சுக்களில்,முதலாவது தவணையை

யாருக்கு வழங்குவது என்பதிலே இழுபறிகள் உள்ளன. மட்டக்களப்புக்கு முதலாவது தவணையை தருமாறு கோரியிருந்தோம். ஆனால் முதலிரு வருடத்தை திருகோணமலைக் தருமாறு குகதாசன் கோரியுள்ளார். இது குறித்து மட்டக்களப்பு தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுடன் பேசி முடிவெடுப்பதாக கூறியுள்ளேன்.

ஊடகங்களில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலை நடத்த வேண்டும் என கோரி, கையெழுத்து சேகரிக்கப்படுவதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி, பொதுத்தேர்தல்களுக்கு...

தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான 1000 கோடி ரூபாவுக்கான மதிப்பீட்டை தேர்தல் ஆணைக்குழு நிதியமைச்சுக்கு வழங்கியுள்ளது.இந்த மதிப்பீட்டு ஆவணங்கள் தற்போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2025 இல் முடிவடையும் அதே வேளை, ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடைபெறவுள்ளது. எனினும் அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தின் படி பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நான்கரை வருடங்கள் நிறைவடைந்த பின்னர் எப்போது வேண்டுமானாலும் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்க அரசியலமைப்பு ஏற்பாடுகள் உள்ளன. .

ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் மோசமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ள நிலையில், இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமென அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

## 2023: தரம் ஐந்து புலமைப்பரிசில்...

2024 பெப்ரவரி 13 முதல் 29 வரை ஒன்லைன் முறை மூலம் மேல்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட உள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moe.gov.lk ஊடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மூலம் அதிகபட்சமாக மூன்று பாடசாலைகளுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

http://g6application.moe.gov.lk/#/ என்ற இணையத்தளத்தின் ஊடாக நேரடியாக முறையீடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.




# விபூதிப் புதனுடன் ஆரம்பமாகும்

# தவக்காலம்

விபூதிப் புதனுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை இவ்வருடத்தின் தவக்காலம் ஆரம்பமாகிறது.

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களால் வருடாந்தம் 40 நாட்கள் இந்த தவக்காலம் அனுஷ்டிக்கப்படுகின்றது. விபூதிப் புதனில் ஆரம்பமாகும் தவக்காலம் பெரிய வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெற்று அதற்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

தவக்காலம். இறைவேண்டல், தவமுயற்சிகள், தருமம் செய்தல், ஒறுத்தல் போன்ற நற்செயல்களை மேற்கொள்வதற்கான காலம் இந்த தவக்காலம்.

அதிலும் குறிப்பாக பிறரன்பு செயல்கள்,நோன்பு, செபம் எனும் மூன்று செயல்களை அதிகமாக வலியுறுத்தும் காலம் இது.நமக்காக துன்பங்களை அனுபவித்து பாடுபட்டு இறந்து உயிர்த்த இயேசுவிற்காக நாம் நம்மை ஒறுத்து செயற்படும் காலம் இது.

தவக்காலம் நோன்பின் காலம் அருளின் காலம் மனமாற்றத்தின் காலம். நமது பழைய பாவ இயல்பை விடுத்து புதிய இயல்பை அணிந்து கொண்டு புதுவாழ்க்கை வாழ நம்மை தூண்டும் காலம்.

கடவுள் நோவாவின் பழைய ஏற்பாட்டு காலத்தில் பாவம் செய்த மக்களை தண்டிக்க 40 நாட்கள் இரவும் பகலும் பூமியின் மேல் மழைபொழியச் செய்தார். இஸ்ரயேல் மக்களின் மனமாற்றத்திற்காகவும் கடவுளின் அருளைப் பெறுவதற்காகவும் மோசே மற்றும் எலியா இருவரும் 40 நாள்கள் தங்களை வருத்தி நோன்பிருந்தனர்.

இஸ்ரயேல் மக்கள் தங்களது பாவத்திற்குப் பரிகாரமாக 40 ஆண்டுகள் கானான் நாட்டிற்குச் செல்வதற்காக பாலைவனத்தில் அலைந்து திரிந்தனர். இயேசு தனது பணிவாழ்விற்குள் நுழையும் முன் 40 நாட்கள் நோன்பிருந்து பாலைவனத்தில் அலகையினால் சோதிக்கப்படுகின்றார். ஆக 40 என்ற எண் முழுமையின் அடையாளமாகவும் மனமாற்றத்திற்கான காலமாகவும் கருதப்படுவதால் தவக்காலத்தையும் நாற்பது நாட்களாக சிறப்பிக்க திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

இயேசுவைப் போலவே நாமும் நாற்பது நாட்கள் இறைவனைப் பற்றி சிந்திக்கவும் அவர் நம் உடன் இருக்கின்றார் என்பதை உணரவும், நமக்கான கடவுளின் திட்டம் என்னவென்று சிந்தித்து நம்மை நாமே கேள்விக்குட்படுத்தவும் அதை அமைதியுடன் வரவேற்கவும் இத்தவக்காலத்தில் அழைக்கப்படுகின்றோம்.

கடவுள் நமக்குள் இருந்தால் நம் வாழ்வின் ஒவ்வொரு கணமும் அவருடைய விருப்பத்தின்படி அவருடைய செயல்களின் வெளிப்பாடாகவே இருக்கும். தவறு செய்வது மனித இயல்பு அதிலிருந்து மீண்டு நற்செயல்களினால் நமது வாழ்வை நாம் மாற்றியமைக்க அழைக்கப்படுகின்றோம்.

அவரை நோக்கித் திரும்பி வரவும் மனம் மாறவும் அழைக்கப்படும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய எண்ணங்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் எண்ணங்களுக்கும் இடையே உள்ள தூரத்தை சிறிதளவாவது குறைக்க இந்த தவக்காலத்தில் அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்துவுடனான நமது வாழ்க்கை எவ்வளவு உண்மையானது என்பது பற்றி சிந்தித்தால்

திருச்சபை தனது பிள்ளைகளாகிய நம் அனைவரையும் மனமாற்றத்தின் பாதையில் முன்னேற வேண்டும் என்ற உறுதியான நோக்கத்துடன் தவக்காலத்தை சிறப்பிக்க அழைக்கிறது.

இயேசுவின் ஆன்மிக ஞானம், உள்ளார்ந்த செபம், அமைதி, நோன்பு, ஒற்றுமை, பகிர்வு போன்ற பண்புகளில் நாம் வளரவேண்டும். நமது புலன்களை அதன் இச்சைகளைக் கட்டுப்படுத்தி இறைவனே எல்லாவற்றுக்கும் மேலானவர். அவர் ஒருவர் மட்டுமே நமக்குப் போதும்



என்று நாம் உணரவேண்டும்.

கடவுள் நம்மை அளவுக்கதிகமாக அன்பு செய்கின்றார் என்பதை உணர்ந்து கடவுள் நம்மேல் காட்டிய இரக்கத்தையும் அன்பையும் நாம் நம் உடன் வாழ்பவர்களிடத்தில் இத்தவக் காலத்தில் பகிர முயல்வோம். கடவுளுக்கும் மற்றவர்களுக்கும் திறந்த இதயத்துடன் இருக்க முயற்சிப்போம்.

இயேசு தன்னுடைய எந்த செயல்களையும் தொடங்குவதற்கு முன் தனித்திருந்து செபித்தார். தன்னுடைய 12 வயதில் இறைவேண்டலையும் இறை பிரசன்னத்தையும் தேடத் தொடங்கிய அவர் இறுதி வரை தவத்தையும் தனி செபத்தையும் ஒரு போதும் கைவிடவில்லை.

பணி தொடங்குவதற்கு செபத்தில் முன் தனித்திருந்தார். புதுமைகள் செய்ய தொடங்கும் முன்னும், செய்து முடித்த பின்னும் இறை செபத்தில் தனித்திருந்தார். தனிமையில் ஒருவருடன் பேசுவதற்கு முன்பும் கூட்டத்தினருக்கு மத்தியில் பேசும்போதும் தனித்திருந்து தன்னுடைய செப ஆற்றலைப் பெருக்கிக்கொண்டார்.

இயேசு தான் வாழ்ந்தது போல நம்மையும் வாழச்சொல்கின்றார். அவர் வாழ்ந்து காட்டி விட்டார். நம்மை வாழ அழைக்கின்றார். அருளை அள்ளித் தரும் இத்தவக்காலத்தில் தனிசெபத்திலும் ஒறுத்தலிலும், பிறரன்பு பணிகளிலும் நம் நேரத்தை செலவிடுவோம். தவக்காலத்தை அருள் தரும் காலமாக மாற்றுவோம்.

தானம், நோன்பு, செபம் என அனைத்தும் வலியுறுத்துவது அன்பையே. தவக்காலம் அன்பை வலியுறுத்தும் காலம். அன்பில் நிலைத்திருப்போம். அன்பால் நிலைத்திருப்போம். தவக்காலம் என்னும் வசந்த காலம் வாழ்வில் வளமையை அள்ளித்தரட்டும்.

நாமும் பல நேரங்களில் சோதனைகளுக்கு ஆளாகின்றோம். துன்புறுகின்றோம். ஆனால் அத்துன்பத்திற்கு நம்முடைய சூழலையும் நேரத்தையும் உடன்வாழும் சக மனிதர்களையும் காரணம் காட்டி விடுகின்றோம். துன்புற்ற நேரத்தில் ஆலயத்திற்கு சென்றாலும் நம்முடைய மன்றாட்டுகள் புலம்பல்களாகவும் அழுகைகளாகவும் தான் இருக்கின்றனவே தவிர, அவை எதனால் என்று எண்ண மறந்துவிடுகின்றோம்.

இந்தத் தவக்காலத்தில் ஒறுத்தல்களையும், செப தவங்களையும் மேற்கொள்ளும் நாம், ஆலயம் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அடிக்கடி செல்லும் இடமே நமது இல்லம். எப்போதாவது சென்றால் அது விருந்தினர் இல்லம். நாம் கடவுளின் பிள்ளைகள் எனில் அவர் வாழும் இல்லம் நமது இல்லம். அனுதினமும் ஆலயம் சென்று நாம் ஆண்டவரின் பிள்ளைகள் என்ற உரிமையை தக்க வைத்துக் கொள்வோம். உண்மை ஒளி நம்மில் தானாக சுடர்விடும்.

கடவுள் அன்பும் அருளும் மிக்கவர். அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அந்த அன்புக்கும் அருளுக்கும் உரிமையுடையவர்கள். அன்பு அருள் இவ்விரண்டையும் நாம் மென்மேலும் வளர்த்துக் கொள்ள நமக்கு மிக உதவியாக இருப்பவை நாம் செய்யும் நற்காரியங்கள்.



சிலர் தங்களுடைய நற்செயல்கள் பிறரால் பாராட்டப்படவில்லை இரசிக்கப்படவில்லை என்று எண்ணி அதனைத் தொடர்ந்து செய்யாமல் விட்டுவிடுகின்றனர். சூரியன் உதிப்பதையும், மறைவதையும் உலகில் வாழும் எல்லோரும், எல்லா நேரமும் இரசிப்பதில்லை. அதற்காக சூரியன் தன் வேலையை செய்யாமல் இல்லை. நாம் செய்கின்ற நற்செயல்களை இரசிப்பவர்களும் அதை விமர்சிப்பவர்களும் இருக்கும் உலகில் தான் நாம் வாழ்கின்றோம். விமர்சனங்களுக்கு பயந்து வாழ்ந்தால் நல்விளைவுகளை அறுவடை செய்ய முடியாது. நாம் நற்செயல்கள் புரிவதற்கென்றே இயேசு கிறிஸ்து வழியாக படைக்கப்பட்டிருக்கின்றோம். அதை உணர்ந்து வாழ்ந்தால் உண்மை ஒளி நம் வாழ்வை மகிழ்விக்கும்.

உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியை நோக்கி வருகின்றனர். தீங்கு செய்பவர்கள் ஒளியை வெறுக்கின்றனர் என்ற நற்செய்தி வாசகத்திற்கு ஏற்ப நமது ஒளி இயேசு என்பதை உணர்வோம். அவர் நமக்காக சிலுவையில் உயர்த்தப்பட்டார். அவரில் நம்பிக்கை கொண்டதால் நாம் நிலைவாழ்வு பெறுகிறோம். கடவுளின் அன்பை முழுமையாக பெறுகின்றோம். நமது தீமை விளைவிக்கக் கூடிய செயல்பாடுகளை மாற்றி இயேசுவின் பாதையில் பயணம் செய்யும் போது, உண்மை ஒளியின் ஒளிக்கீற்றுகளாகின்றோம். உண்மைக்கேற்ப வாழ்வோம் உண்மை ஒளியின் பிம்பங்களாவோம்


**மெரினா ராஜ்**




# சோளங்கந்தை புனித செபஸ்தியார் திருவிழா









கண்டி மறை மாவட்டத்தின் நாவலப்பிட்டி சோளங்கந்தை புனித செபஸ்தியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கொடியேற்றுத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் திருவிழாவுக்கு முதல் தினம் மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை எல்வின் பீட்டர் பெர்னாண்டோ அடிகளார் தலைமையில் இடம்பெற்றதுடன் திருவிழா திருப்பலி கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு வெலன்ஸ் மெண்டிஸ்ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

படங்கள்,தகவல்: மத்தியூ ஜேசுதாசன்

## நம்பிக்கையளிக்கும் லூர்து அன்னையின் பரிந்துரை

# புனித லூர்து மாதா திருவிழா

கத்தோலிக்கத் திருச்சபை கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி லூர்து அன்னை திருவிழாவை சிறப்பித்தது.

உலகெங்கிலும் உள்ள மாதாவின் ஆலயங்களில் சிறப்பு திருப்பலிகள் மற்றும் திருவிழாக்கள் இடம் பெற்றதுடன் ஒவ்வொரு வருடமும் இந்த திருவிழாக் காலங்களில் அற்புதங்கள் நடைபெற்றும் வருகின்றன

மாதாவின் பரிந்துரை அவரை அண்டி வந்தோர் அனைவருக்கும் அருட் கடாட்சமாக பொழியப்பட்டு வருகின்றது.

1858 பெப்ரவரி 11 ஆம் திகதி முதல் 1858 ஜுலை 16 வரை அன்னை மரியாள் பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் மசபியேல் என்ற குகையில் பெர்னதத் சூபிரூஸ் என்ற சிறுமிக்கு தொடர்ச்சியாக காட்சியளித்தார்.

பெப்பிரவரி 25 ஆம் திகதி காட்சியில் மரியன்னையின் கட்டளைப்படி பெர்னதெத் ஒரு இடத்தில் மண்ணில் தோண்ட அங்கு நீரூற்று பீறிட்டெழுகின்றது. அதுவே பின்நாளில் ஓடையாக மாறி இன்றும் திருப்பயணிகளின் நோய் நீக்கும் அற்புத சுகமளிக்கும் இடமாக அந்த நீரூற்று திகழ்கிறது.

இன்றும் எண்ணற்ற நோயாளிகள் லூர்து நகருக்கு யாத்திரையாக சென்று அங் அற்புத சுகம் பெற்று செல்கின்றனர். லூர்து அன்னை திருவிழா கொண்டாடப்படும் பெப்ரவரி 11 ஆம் நாளை திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் உலக நோயாளர்கள் தினமாகத் தேர்ந்தெடுத்து 1992 ஆம் ஆண்டிலிருந்து நாம் அதனைக் கொண்டாட வழிவகுத்திருக்கின்றார். அந்த வகையில் இந்த ஆண்டு நாம் உலக நோயாளர்கள் தினத்தின் வெள்ளிவிழா ஆண்டைக் கொண்டாடுகின்றோம்.

திருத்தந்தைக்கு பார்கின்சன் நோய் இருந்ததென்று 1991 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நோயோடுதான் 14 ஆண்டுகள் அவர் போராடி வாழ்ந்து திருச்சபையில் தனது பணிகளைச் செய்தார். இந்த நோயில் அவர் அடியெடுத்து வைத்ததும் உலகில் பல்வேறு நோய்களால் துன்புறும் மக்களோடு தன்னையே இணைத்துக் கொண்டார்.

இந்த உலகில் நோயினால் அவதியுறும் ஒவ்வொருவருடனும் நாம் இணைக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வானது நாம் நோயுற்றிருக்கும் வேளையில் நமக்குள் எழ வேண்டும்.



திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது போல நோயுற்றோர் மீது இயேசு கொண்டுள்ள மனநிலையை நாமும் பின்பற்றுவோம். இயேசு ஒவ்வொருவர் மீதும் அக்கறை காட்டி, அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்து அவர்களின் இதயங்களை நம்பிக்கை வாழ்வுக்கு திறந்தார்.இந்த மனநிலையோடு நோயாளர்களின் சேவை இல்லச் சந்திப்புகள் அமையட்டும்.

இன்று நம் குடும்பங்களில் நோயுற்றோர், வயது முதிர்ந்தோர் ஆகியோருடன் நேரம் செலவழிக்கத் தயங்குகிறோம். ஆனால் நோயுற்ற நம் சகோதர சகோதரிகளுடன் உடனிருப்பது, அவர்களுடன் நாம் நேரம் செலவிடுவது மிக மிகப் புனிதமானது என்கிறார் நம் திருத்தந்தை.

இந்த இணைப்பால் நாம் பெற்ற அனுபவத்தை நம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்போம். சுயநலத்தால் நோயுற்றோரை விட்டு விலகிச் செல்லும் நம்மவர்களை நோயுற்றோரின் படுக்கையின் அருகில் கொண்டுவந்து அவர்களுடன் உடனிருக்க வைப்போம். அவர்களுக்கு நாம் காட்டும் அக்கறைதான் இயேசுவின் எனக்கே செய்தீர்கள் என்ற பாராட்டை நமக்குப் பெற்றுத் தரும் என்பதை உணர்வோம்.

உலக நோயாளர்கள் தினத்தின் 25 ஆம் ஆண்டை கொண்டாடும் இவ்வேளையில் 'வல்லவராம் கடவுள் எனக்கு மாபெரும் செயல்கள் பல புரிந்துள்ளார்' (லூக்கா 1:49) என்ற மரியன்னையின் வார்த்தைகளையே திருத்தந்தை மையச் சிந்தனையாகத் தந்துள்ளார்.லூர்து அன்னையின் பரிந்துரையில் நம்பிக்கை வைத்து நோயுற்ற நம் சகோதர சகோதரிகளுக்காக செபமாலை ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம்.

**அருட்பணி. பென்சிகர் லூசன்**

## ஜோசப் வாஸ் மன்றத்தின் திறந்தவெளி சிலுவைப்பாதை



கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் வருடாந்தம் நடத்தும் தவக்கால திறந்த வெளி பெரிய சிலுவைப் பாதை இம்முறையும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு பி. அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் அன்றைய தினம் பிற்பகல் 3 .15 மணிக்கு திறந்தவெளி பெரிய சிலுவைப் பாதை நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு புதுச்செட்டித் தெரு புனித வியாகுலமாதா ஆலயத்திலிருந்து சிலுவைப் பாதை பவனி ஆரம்பமாகவுள்ளது. சிலுவைப் பாதை பவனி கொழும்பு ஜெம்பட்டா வீதி, கண்ணாரத் தெரு, ஜிந்துப்பிட்டி மற்றும் விவேகானந்தர் மேடு வழியாக கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தை சென்றடையவுள்ளது.

சிலுவைப் பாதையில் 14 திருநிலைகள் தியானிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பேராலய முன்றலில் சிறப்புத் திருப்பலியுடன் இந்த பெரிய சிலுவைப் பாதை நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன. சிலுவைப்பாதை தியானத்தின் போது அருளுரைகளை மன்றத்தின் ஸ்தாபகர் ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே அடிகளாரின் தலைமையில்அருட் பணியாளர்கள் பலரும் வழங்குவர்.

இறுதி சிறப்புத் திருப்பலி பூசை துணை ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**எல்.எஸ்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 30ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 02

### குறள் தரும் சிந்தனை

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

பெய்யாமல் விடுத்து உயிர்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியதும், பெய்வதன் காரணமாக உயிர்களின் நலிந்த வாழ்வுக்கு வளம் சேர்ப்பதும் மழையே ஆகும்.

# இலங்கை, இந்திய நட்புறவை உறுதிப்படுத்தும் அறிவிப்பு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகவும் நீண்டகால நட்புறவு நிலவி வருகிறது. மிகவும் தொன்மையான காலத்தில் இரு நாடுகளும் நிலரீதியில் ஒன்றாக இணைந்திருந்துள்ளதாக நம்பப்படுகிறது.

அதேநேரம் அயல்நாடு என்ற அடிப்படையில் மாத்திரமல்லாமல் சமய, கலாசார, பொருளாதார ரீதியில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மிகவும் நெருக்கமான முறையில் காணப்படுகிறது. இரு நாட்டு மக்களும் கூட நெருக்கமான உறவைப் பேணி வருகின்றனர். அந்தளவுக்கு இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமானதும் இறுக்கமானதுமான உறவு உள்ளது.

இலங்கை நெருக்கடிகளுக்கு உள்ளாகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முதலில் உதவிக்கு வரும் நாடாக இந்தியா இருந்து வருகின்றது. அதிலும் குறிப்பாக 'அயல் நாட்டுக்கு முதலிடம்' என்ற கொள்கையை இந்தியா அண்மைக் காலமாக முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுத்து வருகிறது. அக்கொள்கையின் அடிப்படையிலும் இலங்கைக்கு அதிக உதவி, ஒத்துழைப்புக்களை நல்கும் நாடாக இந்தியா விளங்குகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அந்த நெருக்கடியின் போது முதலில் உதவி, ஒத்துழைப்புக்களை நல்க முன்வந்த தேசமாக விளங்கும் இந்தியா, குறுகிய காலப்பகுதிக்குள் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியது. இது ஒரு பாரிய ஒத்துழைப்பாகும். அவ்வாறானதொரு உதவி, ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றிராவிட்டால் இலங்கையினால் அப்பொருளாதார நெருக்கடியில் இருந்து குறுகிய காலப்பகுதிக்குள் மீட்சி பெற்று இருக்க முடியாது.

அதன் விளைவாக நாடு மாத்திரமன்றி மக்களும் மிக மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருப்பர். அவ்வாறான துரதிர்ஷ்டகர நிலைக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு பெரிதும் உதவியாக அமைந்திருந்தது. இதனை நாட்டின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிபடக் குறிப்பிட்டு இந்தியாவுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.

இப்பின்புலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவில் மேலும் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இருநாடுகளும் மிக நெருக்கமானதும் பலமானதுமான பொருளாதார உறவுகளுக்கு வித்தூன்றி வருகின்றன. இந்த அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையில் நில ரீதியிலான இணைப்பை ஏற்படுத்தும் வகையில் பாலம் அமைப்பது குறித்தும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன. இதேவேளை ஒருங்கிணைந்த கட்டண முறையும் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தகம், பொருளாதாரம் உட்பட சகல துறைகளிலும் நட்புறவு மென்மேலும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறான சூழலில் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற 7 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கை அனுமதிக்காது என்று மீண்டும் வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளதோடு, 'சீனாவில் இருந்து வருபவை நீரியல் கப்பல்களாகும். அவற்றுக்கு நாம் அனுமதி வழங்குகின்றோம். அதேபோன்று ஏனைய நாடுகளில் இருந்து வரும் கப்பல்களுக்கும் அனுமதி அளிக்கிறோம். எமது நீரியல் திறன்களை மேம்படுத்திவதே எமது இலக்கு' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு இலங்கை இந்தியாவுடன் எவ்வளவு தூரம் நெருக்கமானதும் இறுக்கமானதுமான உறவைக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது.

இந்தியா, இந்நாட்டுக்கு அயல்நாடாக இருக்கின்ற போதிலும், பல்துறைகளிலும் பாரிய முன்னேற்றங்களை அடைந்து கொண்டுள்ளது. அந்த முன்னேற்றங்களின் பயன்களை இலங்கையும் அடைந்து கொள்கிறது. குறிப்பாக இலங்கைக்கு எப்போதும் பக்கபலமாக இருந்துவரும் தேசமாக இந்தியா இருந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு இறுக்கமானதும் உறுதியானதுமான நட்புறவையும் ஒத்துழைப்பையும் பேணும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எந்தக் காரியத்திற்கும் இலங்கை எந்த வகையிலும் துணை போகாது. அதனை ஜனாதிபதி மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறார். இந்த நல்லுறவும் ஒத்துழைப்பும் நீடித்து நிலைக்க வேண்டும். அது நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டுக்கு பக்கத்துணையாக அமையும். மக்களின் விருப்பமும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# பிறர் மீது அன்பு செலுத்தி வாழ்வதற்கு எம்மை தயார்படுத்த உதவும் தவக்காலம்



கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் இவ்வாண்டின் மாசி, பங்குனி ஆகிய மாதங்களை உள்ளடக்கிய காலப்பகுதியானது மகிமைக்குரிய காலப்பகுதியாகும். கிறிஸ்தவ மக்களால் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படும் 'தவக்காலம்' என அழைக்கப்படும் லெந்து காலம் (lent) இம்மாதங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

உபவாசம், ஜெபம் என்பவற்றினூடாக தமது மாம்ச சிந்தைக்குரிய பாவத்திலிருந்து விடுபட்டு இறைவனை அணுகவும், மனிதகுலத்தின் ஆன்ம ஈடேற்றத்திற்காய் தன்னை தியாகம் செய்த இறைமைந்தனின் திருப்பாடுகளை தியானித்து பிறர் நலனில் அக்கறை கொண்டு வாழ தம்மைத் தயார்படுத்தவும் கிறிஸ்தவ பாரம்பரிய நடைமுறைகளுள் ஒன்றாக இக்காலப்பகுதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் இவ்வாண்டும்(2024) எதிர்வரும் மாசி 14 முதல் பங்குனி 30 வரை கிறிஸ்தவ மக்களால் தவக்காலம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. திருச்சபையானது உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்திற்கு முன்னுள்ள 46 நாட்களை அடிப்படையாகக் கொண்டு(ஞாயிற்றுக்கிழமை உட்பட) தவக்காலத்தின் முதல் நாளாகிய விபூதிப் புதன் தினத்தையும்,விபூதிப் புதன் தினத்திலிருந்து உயிர்த்த ஞாயிறு வரையிலுமான ஞாயிற்றுக்கிழமை நீங்கலான 40 நாட்களை தவக்காலம் எனவும் வழமையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

திருவிவிலியத்தின் நற்செய்தி நூல்களின்படி இறைமைந்தன் இயேசுகிறிஸ்து இறைபணியினை ஆரம்பிப்பதற்கு முன்னர் 40 நாட்கள் உபவாசத்துடன் இறைவேண்டலில் ஈடுபட்டிருந்தார். இதனை நினைவு கூரவும், இறைமகனின் மாதிரியைப் பின்பற்றி உபவாசம்,ஜெபம் என்பவற்றின் மூலம் எம்மைப் புதுப்பித்துக் கொண்டு இறைவனோடு ஒன்றித்து நிற்க வசதியாகவுமே திருச்சபையினால் லெந்து காலம் வகுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

முதல் நாள் விபூதிப்புதன் என்றழைக்கப்படும் கிரியையிலிருந்து ஆரம்பமாகும் தவக்காலமானது கிறிஸ்து உயிர்ப்பின் ஞாயிறு வரை கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது. தவக்காலம் அல்லது லெந்து காலமெனப்படும் இக்காலப்பகுதியானது முதல் நாள் சாம்பல் புதன் அல்லது விபூதிப் புதன், முழுமையடையும் நாள் உயிர்த்தெழுந்த ஞாயிறு,இடையே கிறிஸ்து இயேசுவின் எரிசலேம் பவனியை நினைவு கூரும் குருத்தோலை ஞாயிறு,குருத்தோலை ஞாயிறின் பின்னரான தவக்காலத்தின் இறுதிவாரம் பரிசுத்தவாரம் என அடையாளப்படுத்தப்பட்டு கிறிஸ்து இயேசுவின் இறுதி இராவிருந்து,சிலுவை மரணம் என்பவற்றை தியானிக்கும் தினங்களாக முறையே பெரிய வியாழன், பெரிய வெள்ளி எனும் அடிப்படைகளில் ஒழுங்குபடுத்தப்பட்டு திருச்சபையின் பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தம் பாவ ஜீவியத்திலிருந்து விடுபட்டு இறைவனை நேக்கி மனந்திரும்புவதற்கு அடையாளமே திருச்சபையின் திருநீற்றுப் புதனும் சாம்பல் பூசுதலுமாகும். மனந்திரும்பிய நாளிலிருந்து உபவாசத்திலும் ஜெபத்திலும் தரித்திருந்து திருப்பாடுகளைத் தியானிப்பதுடன் இறைவன் எதிர்பார்க்கும் அடுத்திருப்பவரை நேசித்து நற்காரியங்களில் ஈடுபட இக்காலங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

## தியாகம், தியானத்தை நினைவுறுத்தும் மகிமைமிகு தவக்காலம் நாளை ஆரம்பம்

திருநீற்றுப் புதனன்று முன்னைய ஆண்டு குருத்தோலை ஞாயிறில் பெறப்பட்டு வீடுகளில் வைக்கப்பட்டிருந்த காய்ந்த ஓலைச் சிலுவைகள் எரிக்கப்பட்டே பூசுவதற்கான சாம்பல் பெறப்படுவது வழமையாகும். தம் மாம்ச உணர்வுகளையும், சுயநலத்தினையும் எரித்துவிட்டு மனம் திரும்பி இறைமகனின் வழியில் தியாகத்தின் வாழ்வினை வாழ்வதற்கு அடையாளமாகவே குருத்தோலை எரித்தலும் சாம்பல் பூசுதலும் பாரம்பரியமாகக் காணப்படுகின்றது.

தவக்காலம் முழுவதும் கிறிஸ்தவ ஆலயங்களிலும்,கிறிஸ்தவ மக்களிடையேயும் விசேட வழிபாடுகளும் திருப்பாடுகளின் தியானமும், உபவாச ஜெபங்களும் இறைவன் எதிர்பார்க்கும் நற்காரியங்களும் மேலோங்கிக் காணப்படுவதால் வாழ்வு தூய்மையடைகின்றது.

இறைமகன் தம் பாடுகள் எனும் தியாகத்தின் மூலம் தந்தையாம் இறைவனோடு எம்மை ஒப்புரவாக்கினார் என்பதை நினைக்கவும், உபவாசம், ஜெபம் என்பவற்றுக்கூடாக இறைவனுக்குள்ளான வாழ்வைப் பலப்படுத்திக் கொண்டு கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றி அடுத்திருப்போரை ஆதரித்து அன்பு செலுத்தி வாழவும் தவக்காலம் எம்மை தயார்படுத்தும் காலமாய் அமைந்துள்ளது.

தவக்காலத்தைக் குறிக்கும் லெந்து(lent)எனும் சொல்லானது இலத்தீன் மொழி சொல்லிலிருந்து பிறந்ததாகும். இது வசந்தம் என பொருள் குறித்து நிற்கின்றது. மனித வாழ்வில் பாவ ஜீவியம் மறைந்து இறைமகனின் பாடுகளுக்கூடாக இறைவனுக்குள்ளான வாழ்வு துளிர்விட தவக்காலம் வழிகாட்டுகிறது.

அனைவரின் வாழ்வும் வசந்தமடைய மீண்டுமொரு தவக்காலம் இறைமகனின் தியாகத்தினையும் இறைதியானத்தினையும் எமக்கு நினைவுறுத்தி நிற்கின்றது. பக்திபூர்வமாய் அனுஷ்டித்து நமக்கும் பிறருக்கும் இறையருள் சேர்த்து இறைமகனின் தியாகத்தினை பொருளுள்ளதாக்க இத்தவக்காலம் நமக்கு வழிகாட்டட்டும்!



**குழந்தைவேலு சற்குணானந்தன்...**
(அதிபர்) அக்கரைப்பற்று

# யோகா கலையை முறைப்படி கற்பிக்கும் பணியில் பேராசிரியை திருமதி கோமதி



யோகா என்னும் உயிர்காக்கும் கலையை, உடல் பேணும் முறையை தன் தவழ்ந்து விளையாடும் சின்னஞ்சிறு வயதில் இருந்தே 15 ஆண்டுகளுக்கு மேலாக அவரது குருவும் தாத்தாவுமான ஆசனா ஆண்டியப்பன் அவர்களிடம் குருகுலமுறையில் உடன் இருந்து சேவைகள் செய்து முறையாகத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தவர் யோகா நிபுணர், யோகா பயிற்சிஇயக்குநர், யோகா பேராசிரியை திருமதி உ.கோமதி Msc,MPhil, PhD, Msc_yoga ஆவார்.

இவர்15 ஆண்டுகளுக்கு மேலாக 'கோமதிஆசனா ஆண்டியப்பன்யோகா, இயற்கை வாழ்வியல் ஆராய்ச்சி, கல்வி அறக்கட்டளை' என்ற பெயரில் தமிழ்நாட்டின் சென்னையில் நடத்திவரும் பயிற்சி மையத்தில் பல ஆண்களும் பெண்களும் கற்றுத்தேர்ந்து மற்றவர்களுக்கு இக்கலையைப் பயிற்றுவிக்கும் அளவுக்கு உருவாகியிருக்கிறார்கள்.

உலகளாவிய ஒப்பற்ற உயர்வான யோகா எனும் உன்னதக் கலையை தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு நோய்ப்பிணி நீங்குமாறு உற்சாகப்படுத்தி வாழ்வியல் கலைகளோடு தனித்துவம் மிளிர சிறப்பாகக் கற்றுக்கொடுக்கும் பாங்கு எல்லா வயதினருக்கும் ஏற்றதாகவும் எளிதாக கற்றுக்கொள்ளும் விதமாகவும் அமைந்துள்ளது.

பலருக்கும் இவர் சிறப்பு வகுப்புகள் எடுக்கிறார். திருமூலர், பதஞ்சலி போன்ற பலமகான்களின் சித்தர்களின் அடியொற்றி ஆத்மார்த்தமான பிரார்த்தனைகள் உடன்சூழ உள்ளம் தெளிவு பெறவும், உடல்நலம் பெறவும், எண்ணங்களும் செயல்களும் இனிமையும் பெருமையும் ஆழமாகப்பெறும் வகையில் தான் கற்ற யோகா மற்றும் தியானக்கலையை அடிப்படைத் தொடக்கத்தில் இருந்து படிப்படியாக ஏழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என்ற பாகுபாடு இன்றி ஒட்டுமொத்த மனிதசமுதாயத்திற்கான ஒருசேவையாகச் செய்து வருகிறார் அவர்.

திருமதி கோமதி அவர்கள் உண்மையான பல ஆன்மிகப் பணிகளிலும் மக்கள் துயர் போக்கும் சமுதாயப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார். கல்விப்பணி, எழுத்து,கலை, இலக்கியம், சித்தர்கள் ஆராய்ச்சி போன்ற பல்துறை வித்தகராகவும் திகழும் திருமதி கோமதி, தங்கள் அறக்கட்டளை மூலம் மக்களுக்கான பல அரிய சேவைகளையும் ஆலயத்தொண்டுகளையும் செய்து வருகிறார்.

# தமிழ் வெறும் கருவியல்ல, அது வாழ்வியல் தத்துவம்



இனிய நந்தவனம் ஏற்பாட்டில் அந்தமான் தமிழர் சங்கத்தில் கடந்த 10.02.2024 அன்று இலக்கிய சங்கமம் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல்.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்அந்தமான் தமிழர் சங்கச்செயலாளர் கோட்டை காளிதாஸ் முன்னிலை வகித்தார். துணைத் தலைவர் ச.தமிழ்ச்செல்வன் வாழ்த்துரை வழங்கினார்.

கவிஞர் இந்திரஜித் சிறப்புரையாற்றினார். அவர் அங்கு உரையாற்றுகையில், "மற்றவர்களுக்கு மொழி கருவியாக இருக்கலாம். ஆனால் தமிழர்களுக்கு மொழி வெறும் கருவியல்ல, அது வாழ்வியல் தத்துவம்.

தமிழ் இலக்கியங்கள், பிறப்பிலிருந்து இறப்பு வரை வாழ்வியலை கற்றுத் தருகின்றன. தமிழ் கலாசாரமும்,பண்பாடும் சிறந்த சமூகத்தை உருவாக்குகின்றன. எனவே தமிழ் மொழியின் வளர்ச்சியில்தான் தமிழர்களின் மூச்சே இருப்பதாக பாவேந்தர் பாரதிதாசன் தனது கவிதையில் கூறியுள்ளார்.

'செந்தமிழே உயிரே நறுந்தேனே
செயலினை, மூச்சினை உனக்களிப்பேனே
நீ நய்ந்தால் நய்ந்தே போகும் என்வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே'

என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ்மொழி வளர்ச்சியின் மீது தமிழ்நாட்டிலும் பிறமொழி திணிப்பு இருக்கிறது. ஹிந்தி திணிப்பு மீண்டும் தலைதூக்குகிறது. சமஸ்கிருத திணிப்பு கூட இருக்கிறது. தமிழ்மொழியின் மூலத்தை அழித்து அதன் வளத்தை சிதைக்கும் முயற்சி இன்று நேற்று நடக்கும் சூழ்ச்சியல்ல. நெடுங்காலமாக நடப்பதுதான்.

## அந்தமான் தமிழர் சங்கத்தில் நடைபெற்ற இனிய நந்தவனம் இலக்கிய சங்கமம்

வானவியல், கணிதம், மருத்துவம் இப்படி அனைத்து துறைகளிலும் தமிழர்கள் உலகத்திற்கே முன்னோடியாக இருந்தார்கள். தமிழர்களின் மூலத்தை அழிக்க பலவித முயற்சிகள் எடுத்தார்கள்.

வஞ்சகமாக தமிழர்களின் மூலம் அழிக்கப்பட்டு, தமிழ் மூலத்தை திருடி அந்நியர்மொழிகள் தனதாக்கிக் கொண்டன.

பல கட்டங்களில் தமிழ்மொழி மீது தாக்குதல் வந்தபோதும் அதன் சீரிளமை மாறாமல் இருக்க காரணம் நமது மொழி காலத்திற்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் வளம்பெற்றமொழி என்பதனாலாகும்.

முத்தமிழ் இன்று நான்காம் தமிழிலும் கோலோச்சுக்கிறது, உலகம் முழுமையும் கணினித் துறையில் தமிழர்களே திறன்மிக்கவர்களாக உள்ளனர். கணனி தமிழறிஞர் மணவை முஸ்தபாவை நீங்கள் அறிவீர்கள். அவர் 8.6 இலட்சம் தமிழ் கலைச்சொற்களைத் தந்தவர். அவரும் எழுத்தாளர் ஜெயந்தனும் தொடங்கி நடத்திய மணவைத் தமிழ்மன்றத்தின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினராக நான் இருக்கிறேன். "மொழியை உணர்ச்சிமயமாக பார்க்காதீர்கள், அறிவு பூர்வமாக பாருங்கள்" என்று அவர் சொல்கின்றார்.

இதைதான் பாரதியார் 'நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றிட வேண்டும்' என்று அன்றே சொன்னார்.

நித்தம் நித்தம் நமது மொழியை புத்தம் புதிய சக்தியோடு வளர்த்தெடுப்போம்" என்று குறிப்பிட்டார்.

பட்டிமன்றப் பேச்சாளர் எல். அசோக்குமார், முனைவர் ரேவதி ஆகியோர் கருத்துரை வழங்கினர். அந்தமான் கல்லூரிப் பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் தமிழ்மொழி வளர்ச்சி குறித்து பயிற்சி வழங்கினார்.

சிறப்பு நிகழ்வாக இனிய நந்தவனம் 27 ஆம் ஆண்டு மலர் அங்கு வெளியிடப்பட்டது. தமிழர் சங்கத் தலைவர் எல். மூர்த்தி மலரை வெளியிட கவிஞர் இந்திரஜித் பெற்றுக் கொண்டார். மேலும் பட்டிமன்ற பேச்சாளர் எல். அசோக்குமார், கனடா எழுத்தாளர் சந்திரசேகரன், கவிஞர் இந்திரஜித் ஆகியோருக்கு 'வெற்றித்தமிழன்' விருதும், முனைவர் ரேவதிக்கு'வெற்றித்தமிழினி' விருதும் வழங்கப்பட்டன.

இனிய நந்தவனம் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நிகழ்வை ஒருங்கிணைத்து அனைவரையும் வரவேற்றார்.



# மண்வாசனை வீசும் படைப்புகளை வழங்கிய கலாநிதி அமரர் கலாமணி

யாழ் பல்கலைக்கழக கல்வியியல்துறை ஆசானாகிய கலாநிதி தம்பிஜயா கலாமணி (1952.02.04) யாழ்ப்பாணம், அல்வாயைச் சேர்ந்த பிரபல்யமான நாடகக் கலைஞரும் ஆவார். பேராதனை பல்கலைக்கழக பௌதிகவியற் பட்டதாரியன இவர், இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். தனது தந்தையிடம் நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற பல துறைகளையும் கற்றுக் கலைப் பணி ஆற்றி வந்துள்ளார்.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு 'நாட்கள், கணங்கள் நமது வாழ்க்கை' என்பதாகும். இவர் 'ஒப்பிலாமணியே' என்ற குறும்படத்திலும் நடித்துள்ளார். 1974 முதல் சிறுகதை எழுத ஆரம்பித்து 35 ஆண்டுகளில் 30 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வியற் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

வடமராட்சியின் மூத்த விருட்சமாக என்றும் விளங்கும் கலாமணி ஆசான் படைத்த படைப்புக்கள் பல. அவற்றுள் அம்மாவின் உலகம், இலக்கியமும் உளவியலும், இளையோர் இசை நாடகம், ஏனிந்தத் தேவாசுர யுத்தம், காலநதியின் கற்குழிவு, ஜீவநதி நேர்காணல்கள் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.



அல்வாய் மண்ணின் அகள்விளக்காக ஒளிவீசிய ஆசான் கலாமணியின் திரு ஊஞ்சல் கொற்றாவத்தை சிறப்பாவளை அவதாரக் கண்ணன் ஸ்ரீ ரமணன் திருவுடையாள்: பிரதேசமலர் 2011, நதியில் விளையாடி, நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கைகள், பாட்டுத் திறத்தாலே, புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும், பௌதிக விஞ்ஞானக் கலைச்சொற்கள், மாற்றும் காணும் கல்வி உலகுடன் இணைதல், வடமராட்சி வலயக்கல்விச் சமூகம் முன்னெடுக்கும் ஆசிரியர் மகாநாடு 2016 ஆகியன இவரது மண்வாசம் வீசும் நூல்களாகும்.

அண்மையில் கலாமணியின் மைந்தன் பரணீதரனுடன் ஆசானின் முன்னுரைகளை தொகுத்து நூலாக்க வேண்டும் என கலந்துரையாடினோம். அவர் வாழும் போதே நூலாக்க வேண்டும் என முயன்றோம். எனினும் அவருக்கு சமர்ப்பணமாக அந்நூல் விரைவில் வெளிவரும்.

மனோகரா நாடகசபாவின் இயக்குனரான இவர், வாலிவதை, சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, ஸ்ரீவள்ளி, கோவலன் கண்ணகி, பூதத்தம்பி, பாஞ்சாலி சபதம் நாடகங்களில் நடித்துள்ளார். இவரது சிறுகதை நூலுக்கு, அன்றைய வடக்கு, கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் சிறந்த நூலுக்கான விருது 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மண்வாசனை வீசும் எழுத்தை தன் உயிராக நேசித்த அல்வாயின் விளக்கு கலாமணி கடந்த 2024,பெப்ரவரி 9 இல் காலமானார். வடமராட்சியில் முகிழ்ந்த பெருவிருட்சமான கலாமணி ஆசான் என்றும் புதிய தலைமுறைகளுக்கான வழிகாட்டியாய் இருப்பார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# கிழக்கின் குரல்

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16 வது பட்டமளிப்பு விழா நிறைவு










(நிந்தவூர் குறுப், திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16 வது பொது பட்டமளிப்பு விழா கடந்த சனி மற்றும் ஞாயிறு (10,11) ஆகிய தினங்களில், ஒலுவில் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த (10) சனிக்கிழமை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் நெறிப்படுத்தலில் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபா தலைமையில் ஆரம்பமானது. இந்த 16 வது பொது பட்டமளிப்பு நிகழ்வில், 1441 உள்வாரி பட்டதாரிகளும், 711 வெளிவாரி பட்டதாரிகளுமாக மொத்தம் 2152 பட்டதாரிகள் தங்களது பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் முதலாம் நாளின் முதலாவது அமர்வில், கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பட்டதாரிகளும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பட்டதாரிகளும், மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பட்டதாரிகளும் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

குறித்த பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் (11) பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபரின் வழிகாட்டலில், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்றது. இதில் முதலாவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தை சேர்ந்த 314 பட்டதாரிகளும், இரண்டாவது அமர்வில் கலை கலாசார பீடத்தை சேர்ந்த 350 பட்டதாரிகளும், மூன்றாவது அமர்வில் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 361 பேரும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

# சிறுவர்களின் போஷாக்கு, சத்துணவு; கவனம் செலுத்தி ஆராய விஷேட குழு




(பாலமுனை விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சிறுவர்கள் மத்தியில் அதிகரிக்கும் போஷாக்கு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில்,சிறுவர் போஷாக்கு ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கியவாறு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.போஷாக்கு குறைபாட்டை நிவர்த்திப்பது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே,இக்குழு அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அம்பாரை மாவட்ட செயலகமும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து ஏற்பாடு செய்த இக்கலந்துரையாடல், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீச னும் இதில் பங்கேற்றிருந்தார். சிறுவர்களின் போஷாக்கு நலன்கருதி அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடாத்துதல், சிறுவர் பாதுகாப்பு, பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்துதல், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் முன்பள்ளிகள், பாடசாலைகள், சமூக ரீதியாக போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வுகளை நடாத்துதல், உணவு பாதுகாப்பு உணவு உற்பத்தி தொடர்பில் கவனம் செலுத்தி வீட்டுத்தோட்டம், தோட்ட பயிர்ச்செய்கைகளை ஊக்குவித்தல், பாடசாலைகளில் வழங்கப்படும் சத்துணவு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரசாங்கம் வழங்கும் போஷாக்கு கொடுப்பனவு திட்டத்தை கண்கானித்தல் பற்றி இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

# கல்முனை அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)



வரலாற்று சிறப்புமிக்க கல்முனை அருள்மிகு தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழா,இன்று (13) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் இத் திருவிழா, எதிர்வரும் (24) நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

திருவிழாவை முன்னிட்டு தினமும் சிறப்பு பூஜைகளும் விசேட நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 12 நாட்களும் பிற்பகல் 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரை காலை ஞான பூஜை, யாக பூஜை, நித்திய பூஜை,தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெறுவது டன் சுவாமி உள்வீதி, வெளி வீதியில் வலம்வந்து அடியார்களுக்கு தரிசனம் கொடுப்பார்.

# கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் சஹிலாவுக்கு கௌரவம்

(கல்முனை விசேட நிருபர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவியேற்றுள்ள வைத்திய கலாநிதி சஹிலா இஸ்ஸதீனுக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வு (11) இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு வைத்தியசாலை பொறுப்பதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.அஜ்வத் தலைமைதாங்கினார். டொக்டர் சனுஸ் காரியப்பர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார தகவல்கள் பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.எம். முஜீப், சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹிபத்துல் ஹரீம், வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதித் தலைவர் எம்.எஸ்.எம். முபாறக், செயலாளர் எம்.ஐ.எம். சதாத் உட்பட வைத்தியசாலையின் ஊழியர்கள் மற்றும் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும் இதில்,கலந்து கொண்டனர். இதன்போது, சஹிலா இஸ்ஸதீன் நினைவுச் சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



அக்கரைப்பற்று ஹல்லாஜ் இஸ்லாமிய கலைமன்ற த்தின் 36 வது கௌரவிப்பு விழா அண்மையில் (10) அக்கரைப்பற்று நூருல் இர்பான் அரபுக்கல்லூரி வளாக ஹல்லாஜ் அரபுக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கலாபூஷணம் அஸ் ஷெய்க், அஸ்செய்யித், அல்குத்ப் "கலீபத்துல் ஹல்லாஜ்' அப்துல் மஜீத் மக்கத்தார் முன்னிலையில் மன்றத்தின் தலைவர் எம்.ஏ அப்துல் வாஹித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எ.எல்எம்.அதாஉல்லா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.இந்நிகழ்வில் மாணவர் ஒருவர் விருது பெறுவதை படத்தில் காணலாம். (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# பின்தங்கிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் வசிப்போரின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப, நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட 27 குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன. வவுணதீவு பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானநந்தி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (11) பிரதேச செயலக வளாகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பின்தங்கிய கிராம பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் முகமாக வவுனதீவு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 27 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித்திட்ட நிதி உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 4 லட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவித்திட்ட நிதிகளை வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேச மக்களை வலுப்படுத்து முகமாக வாழ்வாதார திட்டதிற்கான பயிற்சிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட உள்ளன. இதனை வெற்றிகரமாக முன்னெடுக்க பயனாளிகள் திறம்பட செயல்பட வேண்டும். என இந்நிகழ்வில் உரையாற்றிய ராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார். இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்து கொண்டார்.

# புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வு

(எம்.எம்.ஜெஸ்மின்)



குருநாகல், பரகஹதெனிய சினாம் மெடிகெயார் நிறுவனத்தின் 12வது வருட நிறைவு மற்றும் உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெண்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு அண்மையில் சினாம் மெடிகெயார் வைத்தியசாலை கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

யூனானி கருத்தரிப்பு வைத்திய நிபுணர் டொக்டர் பஸ்லுல்ஹக் எம். பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யூனானி அழகியற்சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் டொக்டர் சிஜாபா சினாம் , யூனானி வைத்தியர் டொக்டர் பீ. மிரியாழினி உள்ளிட்ட வைத்தியர்களும் பிரதேச பெண்களும் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்

## பலாலியில் காணிகள் சிலவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் பலாலி கிழக்கு பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படும் காணிகளில் சில காணிகளை விடுவிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலர் அ. சிவபால சுந்தரன் தெரிவித்துள்ளார்.

பலாலி கிழக்கில் ஒரு தொகுதி காணியை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில், தற்போது சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கடித பரிமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் கொழும்பில் இருந்து அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தந்து, காணி விடுவிப்புக்கான அளவீட்டு பணிகள் உள்ளிட்ட இதர பணிகளை முன்னெடுக்கும். அதனை அடுத்து காணிகளை விடுத்து உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## வேலணையில் கழிவு சேகரிப்பு நிலையம்

வேலணை பிரதேச சபையினால் திண்மக்கழிவுகளை தரம் பிரித்து பெற்றுக் கொள்வதற்காக சேகரிப்பு நிலையமொன்று வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த கழிவு சேகரிப்பு மையத்தினூடாக வார நாட்களில் காலை 08 மணி முதல் மாலை 04 மணி வரை திண்மக்கழிவுகளைக் கையளிக்க முடியுமென்பதுடன் தரம் பிரிக்கப்படாத கழிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சதீவு அந்தோனியார் திருவிழாவுக்கு செல்லும் பக்தர்களுக்கான அறிவித்தல்



(யாழ்.விசேட நிருபர்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் பொது மக்களுக்கு யாழ்.மாவட்ட செயலர் பின்வரும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிக்கட்டுவான் வரை சேவையில் ஈடுபடும்.

கச்சதீவுக்கான படகுச்சேவையானது குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்கு துறைகளில் இருந்து 23ஆம் திகதி காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்கு துறைகளில் இருந்து, பயணிக்கும் ஒரு நபருக்கான படகுக்குரிய ஒருவழிப் பயணக் கட்டணம்1500 ரூபா ஆகும்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப்படகுகளில் திருவிழாவிற்கு செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக்கொள்வதுடன் படகுகளில் பயணம் செய்பவர்கள் தனித்தனிப் படகாக பயணம் செய்யாது குழுவாக இணைந்து பாதுகாப்பான முறையில் பயணிப்பதுடன் 23 ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்கவேண்டும்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடிநீர் ஏற்பாடுகளுடன் வருகைதருதல் வேண்டும். கச்சதீவு புனித அந்தோனியார்ஆலயமானதுயாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது சம்பந்தப்பட்ட பாவனைப்பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட செயலர் அறிவித்துள்ளார்.

# எக்காலமும் மறக்கப்பட முடியாத மானிட நேயன் மன்னார் முன்னாள் அரசாங்க அதிபர் எம்.எம்.மக்பூல்

நண்பர் மக்பூலுடன் தொடர்பு கொள்ளும் எவருக்கும் அவரது இரண்டு பண்புகள் பளிச்சென தெரியவரும். ஒன்று: அவருக்கு அடிநிலை மக்களின் வாழ்க்கை, அவர்களது சுக துக்கங்கள், பிரச்சினைகள் ஆகியன நன்கு தெரிந்திருந்தன. அம்மக்களது பிரச்சினைகளை அவர் உணர்வு பூர்வமாக விளங்கிக் கொண்டிருந்தார். இரண்டு: தான் எதிர் நோக்கும் எந்தப் பிரச்சினையையும் புலமை நிலைப்பட பார்க்கும் திறன் அவரிடம் இருந்தது. முதலாவது அவரது சொந்த வாழ்க்கையின் அனுபவத்தின் வழியாக வந்தது. இரண்டாவது அவரது கல்வித்திறனால் அவருக்கு கிட்டியது.'

மறைந்த அரசாங்க அதிபர் எம். எம்.மக்பூல் அவர்களைப் பற்றி உலகறிந்த அறிஞர் மறைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறிய வாசகங்களே மேலே குறிப்பிடப்பட்டுள்ளவையாகும்.





உயர்ந்த பண்புகளாலும், உன்னதமான சேவைகளாலும் என்றும் எம் மனதில் நிலைத்து வாழ்பவர்களுள் மன்னாரின் முன்னாள் அரசாங்க அதிபர் மர்ஹூம் எம்.எம். மக்பூல் அவர்களும் ஒருவர்.

கடமையை அவர் உயிரிலும் மேலாகக் கருதினார். கடமை அழைத்த போதெல்லாம் நேரம் பாராது அவ்விடத்துக்குச் சென்று இடர் களைவதில் வல்லவர். அவ்வாறுதான் அன்றும் 1988 ஜனவரி 22இல் அவரை அழைத்துச் சென்றனர். இரக்க சிந்தையுடன் கடமையாற்றிய அந்தப் பெருமகனை அழைத்துச் சென்றவர்கள், இரக்கமின்றி சுட்டுக் கொன்றனர்.

இவரைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய உதுமான், மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஹபீப் முஹம்மது, மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் வை.அஹமது, குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் இப்ராஹிம், இறுதியாக காத்தான்குடி பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய நற்பிட்டிமுனை பளீல் ஆகியோர் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர். முஸ்லிம் சமூகத்தில் வீழ்த்தப்பட்ட இந்த முத்துக்களை, அவர்களது பணிகளை நாம் என்றும் மறந்துவிட முடியாது. உயர் குணம் படைத்த உத்தமராம் எம். எம். மக்பூல், மறைந்து 35 ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

யாழ் மண்ணிலே மீரான் முகிதீன்_ செய்தூன் தம்பதியினரின் மூத்த புதல்வராக ஒரு சாதாரண குடும்பத்தில் 20.04.1942 அன்று மக்பூல் பிறந்தார். இளமைக் கல்வியை யாழ்/ வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் மேற்கொண்டு, அங்கிருந்து 1960 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்துக்கு பட்டப்படிப்பு மேற்கொள்ளச் சென்றார். இறுதிப் பரீட்சையில் மிக சிறப்பாகச் சித்தியடைந்து, 1963 இல் பட்டதாரியாக வெளியேறிய இவர், முதலில் கண்டி கலகெதர முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையை ஆரம்பித்தார். கற்பித்துக் கொண்டே அரச நிர்வாகப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தார்.



பின்னர் இலங்கை வங்கியின் பதவிநிலை உத்தியோகத்தராகச் சொற்பகாலம் கடமையாற்றினார். 1967 இல் இலங்கை நிர்வாக சேவைக்குப் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவானார். அதனைத் தொடர்ந்து சம்மாந்துறையில் பிரிவுக் காரியதிகாரியாகக் கடமையேற்று அங்கு மூன்று வருடங்கள் வரை கடமையாற்றினார். பின்னர் கிளிநொச்சிக்கு காணி அதிகாரியாக மாற்றம் பெற்று அங்கு எட்டு வருடங்கள் கடமையாற்றினார்.

இவர் பிரதிக்காணி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று கொழும்புத் தலைமைப் பீடத்துக்கு மாற்றலாகிச் சென்றார். இக்கால கட்டத்தில் நெதர்லாந்துக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்று உயர்பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பினார். பின்னர் 1981 இல் மன்னாருக்கு மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். 1984 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் வகுப்புக்குப் பதவி உயர்வு பெற்ற மக்பூல், 1985 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மன்னார் மாவட்டத்தின் அரசாங்க அதிபராகவும், மாவட்டச் செயலாளராகவும் பதவியேற்று காலமாகும் வரை அப்பதவியில் திறம்படச் செயலாற்றினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாவட்டக் காணியதிகாரியாகக் கடமையாற்றிய வேளையில் இன, மத பேதமற்ற இவரது சேவைகள் மூலம் தமிழ் மக்கள் இதயத்தில் இடம்பிடித்தார்.

மன்னார் மாவட்டத்தில் இனமத பேதமற்று பணியாற்றினார்.

முன்னாள் யாழ் மாநகர சபை ஆணையாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் அவர்கள் மக்பூலைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'மக்பூல் அவர்கள் தோற்றத்திலும் நடவடிக்கையிலும் முழுமையாக யாழ் தமிழ் பாரம்பரியத்தை பிரதிபலித்த ஒருவராவார். அவருடைய தமிழ் அறிவும், ஆர்வமும், எளிமையாகப் பழகும் தன்மையும், இனிய குணாதிசயங்களும் மிகவும் போற்றத்தக்கவை' என விதந்துரைத்துள்ளார்.

ஈழத்தின் நாவல் இலக்கிய முன்னோடியான சுபைர் இளங்கீரன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'மக்பூல் மனிதாபிமானம் மிக்கவர் பாதிக்கப்பட்டவர்களிடம் அவருக்கு மிகுந்த மனிதாபிமானம் இருந்தது. அவரது மனிதாபமானத்தாலும் சமூக உணர்வினாலும் ஆற்றிய சேவைகள் அவையாகும்.'



ஏழைகள் மீது இரக்கம் கொண்ட மக்பூலின் இதயத்திலும், தலைமைத்துவப் பண்பு நிறைந்த அவரது தலையிலும், ஈவிரக்க மற்றவர்கள் துப்பாக்கி ரவைகளால் துளைத்து வீழ்த்திய துயரம் மனிதத்தை நேசிப்பவர்களின் இதயத்தில் என்றுமே மாறாத வடுவாகும்.

**கலாபூஷணம் யாழ் அஸீம்**

## வாள்வெட்டுத் தாக்குதல்களில் கடந்த வருடம் 13 பேர் பலி!

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் வாள் வெட்டு மற்றும் தாக்குதல் சம்பவங்களுக்கு இலக்காகி, சிகிச்சை பெற்று வந்தவர்களில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வாள்வெட்டு மற்றும் தாக்குதல்களுக்கு இலக்காகி கடந்த வருடம் 983 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் கடந்த வருடம் வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்திருந்த நிலையில், இவ்வாறான மரணங்கள் சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மலையகத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் வீதம் அதிகரிக்கப்பட வேண்டும்

### மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரி. தனராஜ்

ஹட்டன் விசேட நிருபர்

இலங்கை முழுவதிலுமிருந்து 44 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் போது மலையகத்திலிருந்து சுமார் 2500 பேர் செல்ல வேண்டும். ஆனால், இப்போது 700 பேர் வரை தான் பல்கலைக்கழகம் செல்கிறார்கள். நாங்கள் கல்வியில் முன்னேறி விட்டோம் என்று கூற முடியாது என மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினரும் பேராசிரியருமான ரி. தனராஜ் தெரிவித்தார்.



நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டம் 03 விக்னேஸ்வரா ஆரம்ப பிரிவு பாடசாலைக்கான இரண்டு மாடி புதிய கட்டடம் (11) வைபவ ரீதியாக பாடசாலை அதிபர் ஏ. ஜெயசுந்தரம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஆரம்ப பிரிவு ஹோல்புறுக் விஞ்ஞான கல்லூரியின் ஒரு பகுதியில் எவ்வித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வந்த பாடசாலையில் கல்வி கற்று கொழும்பில் வர்த்தகராக இருக்கின்றவர்கள் இணைந்து 3 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடி கட்டடம் குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

விழாவுக்கு வருகை தந்திருந்த பிரதம அதிதிகள் பசுமலை முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக இருந்து மேல வாத்திய இசை முழங்க அழைத்துவரப்பட்டு மாணவர்களின் பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு தேசியக்கொடி ஏற்றி விழா ஆரம்பமாகியது.

இவ்விழாவை சிறப்பிக்கும் வகையில் மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தது. அத்தோடு இப்பபாடசாலைக்கு நிதி உதவி வழங்கியவர்களுக்கு பாடசாலை நிர்வாகத்தால் பொன்னாடை போர்த்தி நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், மலையக மக்கள் இன்றும் ஏழைகளாகவே இருக்கின்றனர். ஆகவே இந்த கட்டடம் அமைத்திருப்பது மிகவும் உயரிய செயல்.

இன்று மலையகத்தை பொருத்தவரையில் பல்வேறு துறைகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உயர் பதவிகளில் எம்மவர்கள் இருக்கின்றனர். ஆகவே நாங்கள் கல்வியில் மிக வேகமாக செல்ல வேண்டிய தேவைப்பாடுகள் உள்ளன என அவர் இதன் போது மேலும் தெரிவித்தார்.








இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் பதுளை மாவட்டச் செயலகம், இந்து சமயப் பேரவை, அகிலன் அமைப்பு மற்றும் ஏனைய இந்து சமயம் சார் நிறுவனங்கள் இணைந்து நடாத்திய பொங்கல் விழா நேற்று முன்தினம் ஞாயிரன்று (11) பதுளை நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. ஊர்வலம், கலை கலாசார நிகழ்சிகள் இடம் பெறுவதைப் படங்களில் காணலாம்.

(படம்.ஊவா சுழற்சி நிருபர்.)

## இனந்தெரியாத பெண்ணின் சடலம் மீட்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

இனந்தெரியாத பெண்ணொருவரின் சடலமொன்று கொத்மலை ஓயாவிலிருந்து (12) மீட்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவிக்கின்றனர். லிந்துலை நாகசேன, அக்கரகந்தவை அண்மித்த கொத்மலை ஓயாவில் சடலம் மீடகப்பட்டுள்ளதாகவும், சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவ இடத்திற்கு நுவரெலியா மாவட்ட நீதவான் வருகை தந்து விசாரணை மேற்கொண்டதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலைச்சாரல்

## சப்ரகமுவ பல்கலையின் ஏழு மாணவர்கள் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஏழு மாணவர்கள் நேற்று (12) கைது செய்யப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் ஒரு மாணவி மற்றும் இரண்டு மாணவர்கள் இதே பீடத்தின் சிரேஷ்ட மாணவர்களால் சில தினங்களுக்கு முன் தாக்குதலுக்குள்ளாகி பலாங்கொடை மற்றும் பம்பஹின்ன வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன் இவர்கள் இப்பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் உணவு அருந்திக் கொண்டிருந்த வேளை விளக்குகளை அணைத்துப் பொல்லுகள் மற்றும் ஆயுதங்களால் தாம் தாக்கப்பட்டதாக பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்துக்கிணங்க இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பம்பஹின்ன பொலிஸார் நேற்று தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## சமூக அறிவியல் ஆய்வகம் மலையகத்தில் உதயம்

மலையக சமூக அறிவியல் ஆய்வகம் எனும் அமைப்பு எழுத்தாளரும், ஆய்வளருமான மதுசூதனன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்டி டெவோன் ரெஸ்டூரன்ட் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



எழுத்தாளரும், ஆய்வாளருமான ரா. நித்தியானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனையடுத்து மலையக பிரச்சினைகள் தொடர்பான பல்வேறு பரப்புக்கள் ஆராயப்பட்டன. இந்நிகழ்வில் ஆய்வாளர்களான பேராதனைப்பல்கலைக்கழக பிரதான நூலகர் ஆர். மகேஸ்வரன், கணக்காய்வு ஆலோசகர் யோகேஸ்வரன், க. பூங்கோதை, சதிஸ்கிருஸ்ண பிள்ளை மற்றும் மலையக கலை, கலாசார, சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன், கண்டி விவேகானந்தாக்கல்லூரி அதிபர் எஸ். சிவஞான சுந்தரம், இரா.அ.இராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வமைப்பின் இணைப்பாளர்களாக ரா. நித்தியானந்தன், மதுசூதனன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்நிகழ்வை இரா.அ. இராமன் ஏற்பாடு செய்திருந்தார்.

www.adz.lk
it's what you want

# சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

வேலைவாய்ப்பு

**113**

**சுசூகி கார்கள்**

விற்பனைக்கு

CAP-8062 Suzuki wagon R, 2015 அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 010231

**320**

**வெற்றிடங்கள்**

**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொத்து, ரைஸ், ரைஸ் என்ட் கறி இற்கு அனுபவமுள்ள ஒருவர் கம்பஹா உணவகத்திற்கு தேவை. 0773976388. 008908

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| KH -7XXX | TOYOTA | VIOS 1.5 EM | 2004 |
| **கெப்** | | | |
| JN -2XXX | ISUZU | CREW CAB | 2000 |
| **வேன்** | | | |
| GJ -8XXX | TOYOTA | TOWNACE | 1997 |
| **லொறி** | | | |
| PP -7XXX | TATA | ACE | 2010 |
| PQ -5XXX | TATA | ACE | 2011 |
| PX -4XXX | DFSK | EQ1020DR | 2013 |
| PT -0XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| DAB -3XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2015 |
| **டிப்பர்** | | | |
| JT -3XXX | NISSAN | DUMP TRUCK | 2000 |
| LK -2XXX | LANKA ASHOK LEYLAND | COMMET TIPPER 1613 | 2010 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HE -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HF -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JK -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JP -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QB -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QE -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| YC -7XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YR -7XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAB -4XXX | BAJAJ | RE205 | 2012 |
| ABA -6XXX | BAJAJ | RE | 2015 |
| AAY -3XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 பெப்ரவரி 13ஆம், 14ஆம், 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 பெப்ரவரி 16ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

www.skillsads.com

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

*Marriage Proposals* in the **Sunday Observer** Is the best way to fulfil your Future Dreams

# மக்கள் வங்கி

## மொனராகல பிராந்தியம்
## மீட்கப்படாத அடகு பொருட்களை ஏலத்தில் விற்றல்.

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள், என்பவற்றில் 2022.11.30ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.03.11ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத. தங்க பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 2024.03.12 மற்றும் 2024.03.13**

| | |
|---|---|
| **ஏலவிற்பனை நடைபெறும் இடம்** | மொனராகல - 068 |
| **கிளை** | பிபில வெல்லவாய. மொனராகல. புத்தல, கதிர்காமம், தலமல்வில். மெதகம, படல்கும்புர, சியம்பலாண்டுவ |
| **சேவை நிலையம்** | மொனராகல, தம்பகல்ல, எதிலிவெவ, ஹம்பேகமுவ, ஒக்கம்பிட்டிய |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிபின் படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், வெல்லவாய வீதி, மொனராகல.

**தொலைபேசி இலக்கம் : 055-2276350 , 055-2276347**

1961 www.peoplesbank.lk PEOPLE'S BANK Pride of the Nation

# பெறுகை அறிவித்தல்

## தேசிய மனநல நிறுவனம் - முல்லேரியா புதிய நகரம்

### விலைக்கோரலுக்கான அழைப்பு

01. தேசிய மனநல நிறுவனத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக முன் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உருப்படி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | வாசனை சவர்க்காரம் (100g) கட்டி | 18000 |
| 02 | பார் சவர்க்காரம் (650g) கட்டி | 2150 |
| 03 | சலவைத் தூள் (1kg) | 2700 |
| 04 | டிஷ்வொஷ் லிக்விட் (600 ml) | 2000 |
| 05 | டிஸ்வொஷ் தூள் (650g) | 1800 |
| 06 | பற்பசை (120g) | 3500 |
| 07 | பற் தூரிகை | 8000 |
| 08 | ஹேன்ட் வொஷ் (4L) கேன் | 400 |
| 09 | D பெட்டறி | 100 |
| 10 | C பெட்டறி | 100 |
| 11 | AA பெட்டறி | 1000 |
| 12 | AAA பெட்டறி | 1000 |
| 13 | 2032 (3V) பெட்டறி | 200 |
| 14 | இறப்பர் கிளவுஸ் | 100 |
| 15 | வாகனம் கழுவும் திரவம் (1L) | 200 |
| 16 | சவர அலகுகள் | 1000 |
| 17 | உணவு பொதிசெய்யும் வெள்ளை தாள் | 200 kg |
| 18 | சின்தடிக் பாய் | 200 |
| 19 | தும்பு கால்துடைப்பம் | 200 |
| 20 | பிளாஸ்டிக் கோப்பை | 2000 |
| 21 | பிளாஸ்டிக் பீங்கான் | 2000 |
| 22 | அகப்பை | 250 |
| 23 | AA ரீசார்ஜபல் பெட்டறி | 60 |
| 24 | பொலித்தீன் கிளவுஸ் | 10000 |

02. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைக்கோரல் இடம்பெறும்.

03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களை 2024-03-14ஆம் திகதி வரையான அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை முல்லேரியா புதிய நகரம், தேசிய மனநல நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2024-03-14ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரைக்கிடையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, தேசிய மனநல நிறுவனம் எனும் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் செய்யப்படும் எழுத்துமூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை (ரூபா 3,500.00) திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை கணக்கிடல் பிரிவிற்குச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

05. விலைக்கோரல் பிணை முறியை விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் திகதி வரையில் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களுடன் விலைக்கோரல் பிணை முறி சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறிபொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''பாவனைப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்'' எனவும் மற்றும் பெறுகை இலக்கத்தையும் குறிப்பிட்டு 2024-03-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே (2024-03-15) பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இதில் நீங்கள் அல்லது உங்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

07. விலைக்கோரல் படிவங்கள் தொடர்பிலான மேலதிக தகவல்களை 0112-578234 (நீடிப்பு 406 / 404) எனும் தொலைபேசி இலக்கத்தில் தேசிய மனநல நிறுவனத்தின் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் படிவங்கள் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது விலைக்கோரல் மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத இந்த பெறுகை விடயங்களுக்கு இயைபான எந்தவொரு விடயம் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை தேசிய மனநல நிறுவனத்தின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

08. விலைமனுக்களைத் தயாரித்தல் தொடர்பில் ஏற்படும் எந்தவொரு செலவுகளுக்காகவும் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புகூற மாட்டார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியா புதிய நகரம்.**

# இலங்கை வங்கி

## அறிவித்தல் — திருத்தம்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

2024.02.09 ஆம் திகதி தினகரன் பத்திரிகையின் 111ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின் முதலாவது பிரிவு பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.12.22ம் திகதி 2364 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 டிசெம்பர் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் உரிமம் பெற்ற ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்ன அவர்கள் 2024 மார்ச் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**திரு. கே.எஸ்.எஸ்.கே. கமகே**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**பகமூனக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும். 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

1. கடன் தொடர்பு இல. 81984288.

வட்டப்பொல, வலகெதர, இல.130/B/1, திரு. எச்.பி.ஐ.சீ. ஹேரத் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023 ஒக்டோபர் 13ஆம் திகதி வெள்ளிக் கிழமை 2354 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 ஒக்டோபர் 12 ஆம் திகதி வியாழக்கிழமை தினகரன், தினமின, மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன அவர்கள் 2024 மார்ச் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கந்து பலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைப் பிரிவில் வெலகெதர கிராம சேவகர் பிரிவில், வெலகெதரயில் அமைந்த “கொரககஹகொட்டுவ வத்த” என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.பி. லங்சக்காரநாயக்க தயாரித்த 1999.02.25 மற்றும் 1998.10.06 திகதியிட்ட வரைபடம் இல. 2198 இல் காணித்துண்டு இல. 1A என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் கால்வாயும் கிழக்கில் கங்ஹத்தயிலிருந்து பிரதான பாதை வரை பாதையும் தெற்கில் காணித்துண்டு 1B உம் மேற்கில் பரணபட்டியவிலிருந்து கடலாதெனிய வரை பிரதான பாதையை பிரிக்கும் எலயும் (ஓடை) எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் ஏழு தசம் இரண்டு பேர்ச்சுகள்(ஏ.0, றூ.2,பே7.2) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் C 401/123இல் பதிவுசெய்யப்படடுள்ளது.
2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கந்து பலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைப் பிரிவில் வெலகெதர கிராம சேவகர் பிரிவில், வெலகெதரயில் அமைந்த “கொரககஹகொட்டுவ வத்த” என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பி. லங்சக்காரநாயக்க தயாரித்த 1998.10.06 மற்றும் 1999.02.25 திகதியிட்ட வரைபடம் இல. 2198 இல் காணித்துண்டு இல. 1B என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் காணித் துண்டு 1Aயும் கிழக்கில கங்ஹத்தயிலிருந்து பிரதான பாதை வரை பாதையும் தெற்கில் மானபெலே வத்தயும் மேற்கில் கொட்ட கும்புர எலயும் (ஓடை) எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் ஏழு தசம் இரண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.2, பே.7.2) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் C401/124இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணிகள் அண்மையில் மீளளவை செய்து ஒன்றிணைத்து பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கந்து பலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைப் பிரிவில் வெலகெதர கிராம சேவகர் பிரிவில், வெலகெதரயில் அமைந்த “கொரககஹகொட்டுவ வத்த“ என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.பி. லங்சக்காரநாயக்க தயாரித்த 2017.03.14 திகதியிட்ட வரைபடம் இல. 8764 இல் காணித்துண்டு இல. 1 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் அகலயும் (கால்வாய்) கிழக்கில் கங்ஹத்தயிலிருந்து பிரதான பாதை வரை பாதையும் தெற்கில் மானபெலவத்தயும் மேற்கில் பரணபட்டியவிலிருந்து கடலாதெனிய வரை பிரதான பாதையும் கொட்ட கும்புர எலயும் (ஓடை) எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் பதிநான்கு தசம் நான்கு பேர்ச்சுகள் (ஏ.1, றூ.0, பே14.4) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், மற்றும் சகலதும் ஆகும்.

1.1 பணம் செலுத்தும் முறை.

ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் கொள்வனவாளர் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

1.1 கொள்வனவாளர் கொள்வனவு விலையில் 10% (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்.

1.2 வற் (VAT) கட்டணம்.(ஏற்புடையதாயின்)

1.3 விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% (ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்.

1.4. ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்.

1.5 ஏற்புடையதாயின் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள்.

1.6 ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையில் 10% ஐ ஏல விற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அத்துடன் விற்பனைத் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொள்வனவு விலையில் மீதி 80% ஐ செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக்கட்டணம் மற்றும், விற்பனை நிபந்தனைகள் மற்றும் விற்பனைச் சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் நொத்தாரிஸ் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்க மறுப்பின் ஏல விலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**2. ஆதனத்துக்கான பிரவேச வழி.**

பிலிமத்தலாவைச் சந்தியிலிருந்து கடலாதெனிய பாதையில் சுமார் 1.1 கி.மீ. தூரம் கடலாதெனிய சந்தி வரை சென்று வட்டப்பொல பாதைக்கு வலதுக்கு திரும்பி சுமார் 5 கி.மீ முன்சென்று இடது புறம் காணப்படும் தெளிவான சட்டரீதியாக வாகன போக்குவரத்துச் செய்யக்கூடிய பிரவேசப்பாதைக்கருகில் ஆதனம் அமைந்துள்ளது. (ஆதனம் வட்டப்பொல ஆரம்பப் பாடசாலையைக் கடந்து 75 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது)

“மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு பிலிமத்தலாவக் கிளை முகாமையாளருடன் தொ.பே. இல. 081-2577151, 081-2579600 மூலம் தொடர்பு கொண்டு பரீட்சிக்கலாம்.”

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி

,

**திருமதி. ஆர்.டபிள்யு.ஏ.எம். குமாரிஹாமி**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி,**
**பிலிமத்தலாவை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் – அம்பாறை

## மீட்கப்படாத நகைகள் ஏலவிற்பனை

மக்கள் வங்கி அம்பாறை தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை நிலையங்களில் 30.11.2022இல் திகதி வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 12.03.2024இல் திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை நிகழும் தினங்கள் - 13.03.2024 மற்றும் 14.03.2024**

| ஏலவிற்பனை நிகழும் இடங்கள் | பிராந்திய தலைமைக் காரியாலயம் அம்பாறை |
|---|---|
| கிளைகள் | அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில் மஹாஓயா, உஹன, காரைதீவு, திருக்கோவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், சாய்ந்தமருது, மருதமுனை. |
| சேவை நிலையங்கள் | இறக்காமம், நவகம்புர, ஆலையடிவேம்பு, விளினியடி, சம்மாந்துறை, பாணம, பதியத்தலாவ, கோணாகோல்ல, மத்திய முகாம், ஒலுவில், பாலமுனை. |

இந்த ஏலவிற்பனைகளை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல.96/A, டி.எஸ் சேனாநாயக்க மாவத்தை, அம்பாறை**
**தொலைபேசி இல. 063 - 2222516**

PEOPLE'S BANK
Pride of the Nation

# இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.01.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. மாத்தறை பிரசித்த நொத்தாரிசு பீ.ஏ.டீ. குமாரதுங்க அத்தாட்சிப்படுத்திய 2015 ஜுன் 26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1916, மாத்தறை பிரசித்த நொத்தாரிசு பி.கே.ஆர். காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2017 ஜுன் 28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1212 மற்றும் 2018 ஜுலை 23 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1750, மாத்தறை பிரசித்த நொத்தாரிசு பீ.பீ. தினேஷா அத்தாட்சிப்படுத்திய 2020 ஜுலை 24 திகதியிட்ட இட்டு முறி இல.1025 மற்றும் மாத்தறை பிரசித்த நொத்தாரிசு கே.ஏ.றீ.எஸ்.டி சில்வா அத்தாட்சிப்படுத்திய 2021 பெப்ரவரி 19 திகதியிட்ட ஈட்டு முறி இல. 264 ஆகியவற்றின் பேரில் மாத்தறை, வீரகோன் வலவ்வவத்த, எலவேல்ல றோட், இல. 156 D/2 எனும் முகவரியைச் சேர்ந்த திரு. பொல்வத்த கால்லகே லலித் பிரசன்ன கால்லகே என்பவரிடமிருந்து 1ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 920,529.20 (தொள்ளாயிரத்து இருபது ஆயிரத்து ஐந்நூற்று இருபத்தொன்பது ரூபாய் இருபது சதமும்) அத்துடன் ரூ. 702,747.83 (எழுநூற்று இரண்டு ஆயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு ரூபாய் எண்பத்தேழு சதம்) மீது ஆண்டுக்கு பதினொரு தசம் ஐந்து (11.5%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 2ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.5,637,466.99 (ஐந்து மில்லியன் அறுநூற்று முப்பத்தேழு ஆயிரத்து நானூற்று அறுபத்தாறு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதமும்) அத்துடன் ரூ. 4,213,945.75 (நான்கு மில்லியன் இருநூற்றுப் பதின்மூன்று ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து ரூபாய் எழுபத்தைந்து சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 3ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.13,349,410.66 (பதின் மூன்று மில்லியன் முந்நூற்று நாற்பத்தொன்பது ஆயிரத்து நானூற்றுப் பத்து ரூபாய் அறுபத்தாறு சதமும்) அத்துடன் ரூ. 9,675,520.10 (ஒன்பது மில்லியன் அறுநூற்று எழுபத்தைந்து ஆயிரத்து ஐந்நூற்று இருபது ரூபாய் பத்து சதம்) மீது ஆண்டுக்கு பதின் மூன்று (13%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 4ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 3,969,105.77 (மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது ஆயிரத்து நூற்று ஐந்து ரூபாய் எழுபத்தேழு சதமும்) அத்துடன் ரூ. 3,155,536.16 (மூன்று மில்லியன் நூற்று ஐம்பத்தைந்து ஆயிரத்து ஐந்நூற்று முப்பத்தாறு ரூபாய் பதினாறு சதம்) மீது ஆண்டுக்கு ஒன்பது தசம் ஐந்து (9.5%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 5ஆவது கடன் மீது ரூ. 2,505,775.09 (இரண்டு மில்லியன் ஐந்நூற்று ஐந்து ஆயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து ரூபாய் ஒன்பது சதம்) ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மாத்தறை பிரசித்த நொத்தாரிசு பீ.ஏ.டீ. குமாரதுங்க அத்தாட்சிப்படுத்திய 2015 ஜுன் 26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1916, மாத்தறை பிரசித்த நொத்தாரிசு பி.கே.ஆர். காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2017 ஜுன் 28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1212 மற்றும் 2018 ஜுலை 23 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1750, மாத்தறை பிரசித்த நொத்தாரிசு பீ.பீ. தினேஷா அத்தாட்சிப்படுத்திய 2020 ஜுலை 24 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1025 மற்றும் மாத்தறை பிரசித்த நொத்தாரிசு கே.ஏ.றீ.எஸ்.டி சில்வா அத்தாட்சிப்படுத்திய 2021 பெப்ரவரி 19 திகதியிட்ட ஈட்டு முறி இல. 264 ஆகியவற்றின் பேரில் 1ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 920,529.20 (தொள்ளாயிரத்து இருபது ஆயிரத்து ஐந்நூற்று இருபத்தொன்பது ரூபாய் இருபது சதமும்) அத்துடன் ரூ. 702,747.83 (எழுநூற்று இரண்டு ஆயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு ரூபாய் எண்பத்தேழு சதம்) மீது ஆண்டுக்கு பதினொரு தசம் ஐந்து (11.5%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 2ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 5,637,466.99 (ஐந்து மில்லியன் அறுநூற்று முப்பத்தேழு ஆயிரத்து நானூற்று அறுபத்தாறு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதமும்) அத்துடன் ரூ. 4,213,945.75 (நான்கு மில்லியன் இருநூற்றுப் பதின்மூன்று ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து ரூபாய் எழுபத்தைந்து சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 3ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.13,349,410.66 (பதின் மூன்று மில்லியன் முந்நூற்று நாற்பத்தொன்பது ஆயிரத்து நானூற்றுப் பத்து ரூபாய் அறுபத்தாறு சதமும்) அத்துடன் ரூ. 9,675,520.10 (ஒன்பது மில்லியன் அறுநூற்று எழுபத்தைந்து ஆயிரத்து ஐந்நூற்று இருபது ரூபாய் பத்து சதம்) மீது ஆண்டுக்கு பதின் மூன்று (13%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 4ஆவது கடன் மீது 2023.11.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 3,969,105.77 (மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது ஆயிரத்து நூற்று ஐந்து ரூபாய் எழுபத்தேழு சதமும்) அத்துடன் ரூ. 3,155,536.16 (மூன்று மில்லியன் நூற்று ஐம்பத்தைந்து ஆயிரத்து ஐந்நூற்று முப்பத்தாறு ரூபாய் பதினாறு சதம்) மீது ஆண்டுக்கு ஒன்பது தசம் ஐந்து (9.5%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 5ஆவது கடன் மீது ரூ.2,505,775.09 (இரண்டு மில்லியன் ஐந்நூற்று ஐந்து ஆயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து ரூபாய் ஒன்பது சதம்) ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.11.17 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மாத்தறை மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

தென் மாகாணம் மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நான்கு பெரும் பகுதியில் மாத்தறை மாநகர சபை எல்லைகளில் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவில் ஹித்தடிய மத்திய 414 B இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாத்தறை, எலவேல்ல பாதையில் அமைந்த வீரக்கோன் வளவ்வேவத்த பாதை வரிமதிப்பு இல. 9/6ஐக் கொண்ட "வீரக்கோன் வளவ்வே வத்த" என அழைக்கும் காணியின் காணித்துண்டு 1 இன் காணித்துண்டு 21, உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.எல்.எம். ரஸ்மி தயாரித்த 2010 மே 15 திகதியிட்ட வரைபடம் இல. 3458 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A வடக்கில் இக்காணியின் காணித்துண்டு 13உம், கிழக்கில் இவ் வரைபடத்தில் காணித்துண்டு Cஉம், தெற்கில் இக்காணியின் காணித்துண்டு 15 (பாதை) மற்றும் காணித்துண்டு 22 (வரி மதிப்பு இல. 9/4) உம் மேற்கில் மெதகெதரவத்தயும் எல்லைகளாகக் கொண்டு ஆறு பேர்ச்சுகள் (ஏ.0, றூ0, பே.6) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் A 914/140இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இங்கு இரண்டாவது அட்டவணையில் பாதை ஒதுக்கம் தொடர்பில் மிகவும் விபரமாக விபரித்த பாதை மீதான வழி உரிமையும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

1. மேற்குறிப்பிட்டவாறு மாத்தறை, எலவேல்ல பாதையில் அமைந்த "வீரக்கோன் வளவ்வே வத்த" என அழைக்கும் காணியின் காணித்துண்டு 1 இன் காணித்துண்டு 21, உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.எல்.எம். ரஸ்மி தயாரித்த 2010 மே 15 திகதியிட்ட வரைபடம் இல. 3458இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு B என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு B வடக்கில் இவ்வரைபடத்தில் காணித்துண்டு C உம், கிழக்கில் இவ் வரைபடத்தில் காணித்துண்டு Cஉம், தெற்கில் காணித்துண்டு 15(பாதை) உம் மேற்கில் இவ்வரைபடத்தில் காணித்துண்டு Aஉம் எல்லைகளாகக் கொண்டு பன்னிரெண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ0, பே.12) விஸ்தீரணமுடையது. இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் A 914/141இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. மேற்குறிப்பிட்டவாறு மாத்தறை, எலவேல்ல பாதையில் அமைந்த "வீரக்கோன் வளவ்வே வத்த" என அழைக்கும் காணியின் காணித்துண்டு அளவையாளர்- கே. சிறிவர்தன தயாரித்த 1992 நவம்பர் 11 திகதியிட்ட வரைபடம் இல. 1, உத்தரவு பெற்ற நில 275/1992இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 15 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் காணித்துண்டு 10 (பாதை), காணித்துண்டு 19 மற்றும் காணித்துண்டு 21உம், கிழக்கில் காணித்துண்டுகள் 16, 19, 25உம், தெற்கில் காணித்துண்டுகள் 22, 23, 24உம் மேற்கில் காணித்துண்டுகள் 14, 20, 22 உம் எல்லைகளாகக் கொண்டு ஏழு தசம் இரண்டு ஏழு பேர்ச்சுகள் (ஏ.0. றூ0, பே.7.27) விஸ்தீரணமுடையது. இக்காணிமாத்தறை காணிப் பதிவகத்தில் A 914/142இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. மேற்குறிப்பிட்டவாறு மாத்தறை, எலவேல்ல பாதையில் அமைந்த "வீரக்கோன் வளவ்வே வத்த" என அழைக்கும் காணியின் காணித்துண்டு 01, உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.சிறிவர்தன தயாரித்த 1992 நவம்பர் 11 திகதியிட்ட வரைபடம் இல. 275/1992இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 10 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் காணித்துண்டுகள் 8, 7, 4, 3, 2, 1உம், கிழக்கில் காணித்துண்டுகள் 6, 5, 1 மற்றும் எல (ஓடை)உம், தெற்கில் காணித்துண்டுகள் 14, 15,16,17உம் மேற்கில் காணித்துண்டுகள் 8, 9, 11, 12 உம் எல்லைகளாகக் கொண்டு பதினான்கு தசம் ஐந்து ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ0, பே.14.55) விஸ்தீரணமுடையது. இக்காணி மாத்தறை காணிப்பதிவகத்தில் A 950/129இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**டபிள்யு.டபிள்யு.ஏ.ஜே. பிரசங்க**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மாத்தறை மேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# பகிரங்க அறிவித்தல்

**2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242ஆம் பிரிவுக்கு அமைவான ஒருங்கிணைப்பு**

**சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. (கம்பனி இல. PQ 160) மற்றும் சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 105194) மற்றும் டோமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV128617)**

சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 105194), டோமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PQ160) ஆகிய நிறுவனங்களின் சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எஸ்.சி. உடனான ஒருங்கிணைப்பு 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)ஆம் பிரிவுக்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்பட்டு, ஒருங்கிணைப்புச் சான்றிதழ் 2024 ஜனவரி 22ஆம் திகதி கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ளது என்பது மேற்படிச் சட்டத்தின் 244(3)ஆம் பிரிவுக்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சட்டத்தின் 244ஆம் பிரிவுக்கு அமைவாக, இந்த ஒருங்கிணைப்பு 2024 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது என்பதுடன், மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகள் 2024 ஜனவரி 01ஆம் திகதியுடன் கலைக்கப்பட்டு சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. என்ற பெயரில் தொடர்ந்து இயங்கும்.

இல.400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2024 பெப்ரவரி 13

சபைகளின் கட்டளைப்படி
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்

# இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2024.01.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு ஏ. ராஜேந்ரா அத்தாட்சிப்படுத்திய 1995.05.31 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1789, பிரசித்த நொத்தாரிசு ஏ. ராஜேந்ரா அத்தாட்சிப்படுத்திய 1991.11.22 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1204, பிரசித்த நொத்தாரிசு எல்.எஸ். அதாவுத அத்தாட்சிப்படுத்திய 2000.03.16 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1557, பிரசித்த நொத்தாரிசு எல்.எஸ். அதாவுத அத்தாட்சிப்படுத்திய 2005.07.04 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3988, பிரசித்த நொத்தாரிசு எல்.எஸ். அதாவுத அத்தாட்சிப்படுத்திய 2006.06.23 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4974, பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2006.12.21 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 272, பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2011.01.26 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1535 பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2015.05.28 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3151, பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2018.07.05 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4196 ஆகியவற்றின் பேரில் ஹற்றன், திக்கோயா வீதி, இல. 11, "திலகாஸ்" எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ரங்கசாமி கிருஷ்ணமூர்த்தி மற்றும் திருமதி சுப்பையா நவநீதா ஆகியோரிடமிருந்து தவணைக் கடன் மீது 2023.10.13 வரை முதலும் வட்டியும் ரூ. 50,215,129.26 (ஐம்பது மில்லியன் இரு நூற்றுப் பதினைந்தாயிரத்து நூற்று இருபத்தொன்பது ரூபாய் இருபத்தாறு சதமும்) அத்துடன் ரூ.35,084,650.00 (முப்பத்தைந்து மில்லியன் எண்பத்து நான்காயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று தசம் ஐந்து பூச்சியம் (23.50%) வீதத்தில் 2023.10.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 1ஆவது நிரந்தர மேலதிகப் பற்று மீது 2023.10.13 வரை முதலும் வட்டியும் ரூ. 8,938,997.07 (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றேழு ரூபாய் ஏழு சதமும்) அத்துடன் ரூ. 6,750,000.00 (ஆறு மில்லியன் எழுநூற்றைம்பதாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினேழு தசம் ஒன்பது ஆறு (17.96%) வீதத்தில் 2023.10.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 2ஆவது நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.10.13 வரை முதலும் வட்டியும் ரூ. 15,891,550.34 (பதினைந்து மில்லியன் எண்ணூற்றுத் தொண்ணூற்றொராயிரத்து ஐந்நூற்று ஐம்பது ரூபாய் முப்பத்து நான்கு சதமும்) அத்துடன் ரூ. 12,000,000.00 (பன்னிரெண்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினேழு தசம் ஒன்பது ஆறு (17.96%) வீதத்தில் 2023.10.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 3ஆவது நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.10.13 வரை முதலும் வட்டியும் ரூ. 10,594,366.89 (பத்து மில்லியன் ஐந்நூற்று தொண்ணூற்று நான்காயிரத்து முந்நூற்று அறுபத்தாறு ரூபாய் எண்பத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ. 8,000,000.00 (எட்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினேழு தசம் ஒன்பது ஆறு (17.96%) வீதத்தில் 2023.10.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு ஏ. ராஜேந்ரா அத்தாட்சிப்படுத்திய 1995.05.31 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1789, பிரசித்த நொத்தாரிசு ஏ. ராஜேந்ரா அத்தாட்சிப்படுத்திய 1991.11.22 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1204, பிரசித்த நொத்தாரிசு எல்.எஸ். அதாவுத அத்தாட்சிப்படுத்திய 2000.03.16 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1557, பிரசித்த நொத்தாரிசு எல்.எஸ். அதாவுத அத்தாட்சிப்படுத்திய 2005.07.04 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3988, பிரசித்த நொத்தாரிசு எல்.எஸ். அதாவுத அத்தாட்சிப்படுத்திய 2006.06.23 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4974, பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2006.12.21 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 272, பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2011.01.26 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1535 பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2015.05.28 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3151, பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2018.07.05 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4196 ஆகியவற்றின் பேரில் தவணைக் கடன் மீது ரூ. 50,215,129.26 (ஐம்பது மில்லியன் இரு நூற்றுப் பதினைந்தாயிரத்து நூற்று இருபத்தொன்பது ரூபாய் இருபத்தாறு சதமும்) 1 ஆவது நிரந்தர மேலதிகப் பற்று மீது ரூ. 8,938,997.07 (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றேழு ரூபாய் ஏழு சதமும்) 2 ஆவது நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது ரூ.15,891,550.34 (பதினைந்து மில்லியன் எண்ணூற்றுத் தொண்ணூற்றொராயிரத்து ஐந்நூற்றைம்பது ரூபாய் முப்பத்து நான்கு சதமும்) 3 ஆவது நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது ரூ.10,594,366.89 (பத்து மில்லியன் ஐந்நூற்று தொண்ணூற்று நான்காயிரத்து முந்நூற்று அறுபத்தாறு ரூபாய் எண்பத்தொன்பது சதமும்) 2023.10.14 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ஹற்றன் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம் தற்போது நுவரெலிய மாவட்டம், கம்பளை பதிவு மாவட்டத்தில் அம்பகமுவ கோரளை உட புலத்கமவில் அம்பகமுவ கோரளை பிரதேச செயலக எல்லைகளில் ஹற்றன் திக்கோயா நகர சபை எல்லைகளுள் டன்பார் 319E இலக்க கிராம சேவகர் பிரிவில் வோர்ட் இல. 3 இல் ஹற்றன் திக்கோயாவில் அமைந்த டன்பார் வீதி வரிமதிப்பு இல. 47 இன் பகுதி தற்போது வரிமதிப்பு இல. 47/2 ஐக் கொண்ட நில அளவையாளர் நாயகம் அதிகாரம் அளித்த 1969 ஆகஸ்ட் 8 திகதியிட்ட வரைபடம் இல.மஹ 322 இல் மற்றும் 1988.10.24 திகதியிட்ட புறக்குறிப்பினதும் பிரகாரம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ.எல்.டீ.வை. விஜேவர்தன தயாரித்த 1986.05.06 திகதியிட்ட வரைபடம் இல. 3032 இல் எல்லை நிர்ணயித்த டன்பார்வத்தயின் காணித்துண்டு 9 என அடையாளமிட்ட குறித்த காணித்துண்டு 9, மேற்கூறிய வரைபடம் இல. மஹ 322 இன் பிரகாரம் வடக்கில் காணித்துண்டு 6 என அடையாளமிட்ட பாதை ஒதுக்கமும் கிழக்கில் இவ் வரைபடத்தின் காணித்துண்டு 10உம் தெற்கில் பாதையும் ஓடையும் மேற்கில் இக்காணியின் காணித்துண்டு 8உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து தசம் எட்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.15.8) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்கூறிய வரைபடம் மஹ 322இல் காணித்துண்டு 6 என அடையாளமிட்ட பாதை ஒதுக்கம் மீதான வழி உரிமையும் ஆகும். இக்காணி கம்பளை காணிப்பதிவகத்தில் பக்கம் B120/92ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,**

**எஸ்.டீ. பிஹில்லந்த**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி,**
**ஹற்றன் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion
Classifieds on
Daily News

# இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2024.01.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. மாத்தறை பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமாகிய பிலான பத்திரணகே கயானி டினேஷா அத்தாட்சிப்படுத்திய 2020 ஜுலை 28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1026 இன் பேரில் மாத்தறை, ஹிற்றட்டிய கிழக்கு, குணரத்ண முதலிந்த பிரிவென றோட், மஹஹேன இல. 59/10 எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி. பலவின்னகே சவந்தி வகீஷா முத்துகுமாரண மற்றும் திக்வெல்ல, பிஹிம்பிய றோட், "சிங்ஹ" என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி. நிமா டஸ்னி விக்ரமசிங்ஹ ஆகியோரிடமிருந்து கடன் மீது 2023.11.15 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 8,962,198.99 (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்திரண்டு ஆயிரத்து நூற்று தொண்ணூற்றெட்டு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதமும்) அத்துடன் ரூ. 7,778,201.88 (ஏழு மில்லியன் எழுநூற்று எழுபத்தெட்டு ஆயிரத்து இருநூற்றொரு ரூபாய் எண்பத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு பதினொரு தசம் ஏழு ஐந்து (11.75%) வீதத்தில் 2023.11.16 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்கூறிய 2020.07.28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1026 இன் பேரில் கடன் மீது ரூ. 8,962,198.99 (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்திரண்டு ஆயிரத்து நூற்று தொண்ணூற்றெட்டு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதமும்) 2023.11.16 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்)மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மாத்தறை மேற்தரக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

தென் மாகாணம் மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நான்கு பெரும் பகுதியில் மாத்தறை மா நகர சபை எல்லைகளில் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவில் ஹித்தட்டிய கிழக்கு 420 A இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹித்தட்டியவில் அமைந்த முதலிந்த பிரிவெனா றோட் வரிமதிப்பு இல. 59/10ஐக் கொண்ட "குருப்புகேவத்த அல்லது மஹவத்த" என அழைக்கும் காணியின் காணித்துண்டு 2 இன் காணித்துண்டு F, உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. தஹநாயக்க தயாரித்த 1991 ஜுலை 28 திகதியிட்ட வரைபடம் இல. 1417இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு F2 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு F2 வடக்கில் இக்காணியின் காணித்துண்டு 1உம், கிழக்கில் இக் காணியின் காணித்துண்டு Gஉம், தெற்கில் இக்காணியின் காணித்துண்டு J (10 அடி அகலப் பாதை) மேற்கில் இக்காணியின் காணித்துண்டு F1உம் எல்லைகளாகக் கொண்டு ஏழு தசம் இரண்டு மூன்று பேர்ச்சுகள் (ஏ.0, றூ0, பே.7.23) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் A 893/126இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணித்துண்டு F2, உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. தஹநாயக்க தயாரித்த 2015 செப்டெம்பர் 10 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1417 Bஇன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஹித்தட்டியவில் அமைந்த முதலிந்த பிரிவெனா றோட் வரிமதிப்பு இல. 59/10ஐக் கொண்ட "குருப்புகேவத்த அல்லது மஹவத்த" என அழைக்கும் காணியின் நான்கில் மூன்று பாகத்தின் காணித்துண்டு 2 இன் காணித்துண்டு F உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. தஹநாயக்க தயாரித்த 2015 செப்டெம்பர் 11 திகதியிட்ட வரைபடம் இல. 1417 Bஇல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு F2 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு F2 வடக்கில் இக்காணியின் காணித்துண்டு 1 உம், கிழக்கில் இக் காணியின் காணித்துண்டு Gஉம், தெற்கில் இக்காணியின் காணித்துண்டு J (10 அடி அகலப் பாதை) மேற்கில் இக்காணியின் காணித்துண்டு F1உம் எல்லைகளாகக் கொண்டு ஏழு தசம் இரண்டு மூன்று பேர்ச்சுகள் (ஏ.0, றூ0, பே.7.23) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**டபிள்யு.டபிள்யு.ஏ.ஜே. பிரசங்க**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மாத்தறை மேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டம், 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**1) கடன் வசதி தொடர்பிலக்கம் - 82146184**

ஹெட்டிபொல, ரிட்டதெனிய எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ஹேரத் முதியன்சேலாகே பத்மசிறி பண்டார ஹேரத் மற்றும் திருமதி.கிருலப்பன விதானகே சமரி ஜயோமி ரத்நாயக்க ஆகிய இருவரினதும் அடமானம் வைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை. இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.10 ஆம் திகதியிட்ட 2358 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.11.03 ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் டீ அன்ட் எச் ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.டீ. கருணாரத்ன அவர்கள் 06.03.2024 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமத்திய மாகாணம் குருணாகல் மாவட்டம் கட்டுகம்பொல ஹத்பற்று கரந்தபற்று கோரளையில் பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லைகளுள் மேற்கு பண்டுவஸ்நுவர பிரதேச செயலகப் பிரிவில் 1413, தகனக்கெதர கிராம உத்தியோகத்தர் பிரிவு ஹொரம்புவ கிராமத்தில் அமைந்துள்ள கொந்தரதுஹேன, கோதாயாயேஹேன மற்றும் கொந்தராதுஹேன என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.எம்.திஸாநாயக்க தயாரித்த 2006.03.15 திகதியிடப்பட்ட 1673 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு வடக்கில் F.V.P2110 இல் விபரிக்கப்பட்டுள்ள 61, 62ஆம் இலக்க காணித்துண்டுகளையும், கிழக்கில் (அதே காணியின் பகுதி) 62ஆம் இலக்க காணித்துண்டையும் வீதியையும், தெற்கில் தற்போது பிரதேச சபை பாதையாக உள்ள பாதைக்கான ஒதுக்கத்தையும் உதய என்பவரால் உரிமை கோரப்படும் காணியையும், மேற்கில் அக்கரவத்த-கிராம எல்லையையும் உதய என்பவரால் உரிமை கோரப்படும் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஆறு ஏக்கர் இரண்டு றூட்கள் பதினான்கு பேர்ச்சுகள் (ஏ6.றூ2.பே.14) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் பக்கம் Q20/117 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு ரூ. 1,450,000.00 சேமிப்பு கணக்கில் 1526709 (திரு. எச்.எம்.பீ.பீ. கேரத் யும் திருமதி. கே.வீ.சீ.ஜே. ரத்னாயக)

ஏலவிலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் குளியாப்பிட்டிய மேற்தரக் கிளையின் முகாமையாளர் பிரிவினைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் :- 037-2281280.

**பணம் செலுத்தும் முறை :** ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. பெ.சே.வரி (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும், சேவைக் கட்டணங்களும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் அத்துடன் விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள - நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும். விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**

**திருமதி.ஏ.ஏ.எல். அபேசிங்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**குளியாப்பிட்டிய மேற்தரக்கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு

# இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பதவி வெற்றிடங்கள்

பெருந்தோட்டத் துறையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான மதிப்பு மிக்க நிறுவனமான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மாத்தளை, கண்டி, காலி, ஹப்புத்தளை பிராந்தியங்களில் உள்ள தோட்டங்களில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்கு உள்வாரி விண்ணப்பதாரிகள் உட்பட தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி: நிர்வாக அதிகாரி (ADMINISTRATIVE OFFICER)**

**அனுபவம்:**

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் சிரேஷ்ட எழுத்தராக 05 வருடங்கள் அல்லது நிர்வாக அதிகாரியாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

**2. பதவி: சிரேஷ்ட உதவி எழுத்தர் (SENIOR ASSISTANT CLERK)**

**அனுபவம்:**

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் கனிஷ்ட இலிகிதராக 10 வருடங்கள் அல்லது இலிகிதராக 05 வருடங்கள் அல்லது சிரேஷ்ட உதவி இலிகிதராக 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

**3. பதவி: கனிஷ்ட எழுத்தர் (JUNIOR CLERK)**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

க.பொ.த. சா/த பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடத்தில் சித்தியுடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் கனிஷ்ட இலிகிதர் / பயிலுநர் இலிகிதராக 06 மாத காலத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

**4. பதவி: வெளிக்கள அதிகாரி (FIELD OFFICER)**

**அனுபவம்:**

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் உதவி கனிஷ்ட வெளிக்கள அதிகாரியாக 10 வருடங்கள் அல்லது உதவி வெளிக்கள அதிகாரியாக 05 வருடங்கள் அல்லது வெளிக்கள அதிகாரியாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

**5. பதவி: உதவி வெளிக்கள அதிகாரி (ASSISTANT FIELD OFFICER)**

**அனுபவம்:**

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் உதவி கனிஷ்ட வெளிக்கள அதிகாரியாக 05 வருடங்கள் அல்லது உதவி வெளிக்கள அதிகாரியாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

**6. பதவி: கனிஷ்ட உதவி வெளிக்கள அதிகாரி (JUNIOR ASSISTANT FIELD OFFICER)**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

க.பொ.த. சா/த பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடத்தில் சித்தியுடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் உதவி கனிஷ்ட வெளிக்கள அதிகாரி / பயிலுநர் உதவி கனிஷ்ட வெளிக்கள அதிகாரியாக 06 மாத காலத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

**7. பதவி: தொழிற்சாலை அதிகாரி (FACTORY OFFICER)**

**அனுபவம்:**

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் உதவி தொழிற்சாலை அதிகாரியாக 10 வருடங்கள் அல்லது சிரேஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரியாக 05 வருடங்கள் அல்லது தொழிற்சாலை அதிகாரியாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

**8. பதவி: சிரேஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி (SENIOR ASSISTANT FACTORY OFFICER)**

**அனுபவம்:**

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் உதவி தொழிற்சாலை அதிகாரியாக 05 வருடங்கள் அல்லது சிரேஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரியாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

**9. பதவி: உதவி தொழிற்சாலை அதிகாரி (ASSISTANT FACTORY OFFICER)**

**அனுபவம்:**

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் அல்லது பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் கனிஷ்ட தொழிற்சாலை அதிகாரியாக 05 வருடங்கள் அல்லது உதவி தொழிற்சாலை அதிகாரியாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.

**10. பதவி: தோட்ட மருத்துவ உதவியாளர் (ESTATE MEDICAL ASSISTANT)**

**அனுபவம்:**

கீர்த்திவாய்ந்த நிறுவனமொன்றில் கனிஷ்ட மருத்துவ உதவியாளராக 05 வருடங்கள் அல்லது மருத்துவ உதவியாளராக 01 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

**வயது:**

நிர்வாக அதிகாரி, தொழிற்சாலை அதிகாரி, வெளிக்கள அதிகாரி மற்றும் தோட்ட மருத்துவ உதவியாளர் பதவிகளுக்கு 50 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் ஏனைய அனைத்து பதவிகளுக்கும் 45 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** அமுலில் உள்ள கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம்.

முழுமையான சுய தரவுகள் மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை 2024 பெப்ரவரி 28ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.**

திகதி: 08.02.2024

---

மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்

## வீதிப் பயண போக்குவரத்து அதிகாரசபை (மேல் மாகாணம்)

### குணசிங்ஹபுர பிரதான பஸ் நிறுத்துமிடத்தில் மலசலகூட அமைப்பை 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுதல்

மேல் மாகாண வீதிப் பயண போக்குவரத்து அதிகாரசபைக்கு சொந்தமான குணசிங்ஹபுர பஸ் நிறுத்தும் அலகில் அமைந்துள்ள மலசலகூட அமைப்பை 02 வருட காலத்திற்கு கட்டணம் அறவிடலை குத்தகை அடிப்படையில் நடத்திச் செல்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| விண்ணப்பப் படிவக் கட்டணம் | மீண்டும் வழங்கப்படும் பிணை வைப்புத் தொகை | விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முகவரி | விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| ரூ.1000.00 | ரூ.10,000.00 | தலைமையகம், வீதிப் பயண போக்குவரத்து அதிகாரசபை (மே.மா) இல.89, ரன்மகபாய, கடுவளை வீதி, பத்தரமுல்ல | அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை (2024.03.04 பி.ப. 3.00 வரை மட்டும்) |

பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.03.05 - 1.00 மணிக்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து தலைமையகத்தின் தரைமாடியில் நிர்வாகப் பிரிவில் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) இன் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களைத் திறத்தல் 2024.03.05 பி.ப. 14.00 மணிக்கு இடம்பெறுவதுடன் ேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம்.

மேலதிக விசாரணைகள் நிர்வாக அதிகாரி (செயற்றிட்டங்கள்) - 0112868614

**தலைவர்**
**சிறிய பெறுகைக் குழு,**
**வீதிப் பயண போக்குவரத்து அதிகாரசபை (மே.மா)**
**இல. 89, ரன்மகபாய,**
**கடுவளை வீதி, பத்தரமுல்ல**
**2024.02.13**

---

வரையறுக்கப்பட்ட
இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

## கேள்விக்கோரலின் கால எல்லை நீடிப்பு

கொள்முதல் இலக்கம் : *CFHC/PD/T/FUEL DISPENSING UNIT / 2024/03*

2024.01.12 ஆம் திகதி மிரிஸ்ஸ, திக்கோவிட்ட, நீர்கொழும்பு, அம்பலாங்கொடை, நில்வெல்ல, குடாவெல்ல, வாழச்சேனை, சுதுவெல்ல, ஹிக்கடுவ, ஹம்பாந்தோட்டை, சிலாபம், கலமெட்டிய, பேருவல, காலி, புரானவெல்ல மற்றும் கொட்பே மீன்பிடி துறைமுகங்களுக்காக இரட்டை பம்புகள் 110/130 திரவ எரிபொருள் விநியோக அலகுகள் 22, கிரிந்த, தொடந்துவ மற்றும் நில்வெல்ல மீன்பிடி துறைமுகங்களுக்காக **60/80 L/Min** கலோரி ஒற்றை பம்ப் மண்ணெண்ணெய் விநியோக அலகுகள் 03 இனை வழங்கல், போக்குவரத்துச் செய்தல் மற்றும் நிறுவல் **(Supply,Delivery - Installation)** 20 அளவை கேன்கள் 17 கொள்வனவு செய்வதற்கா விளம்பரப்படுத்துவதற்காக அறிவித்தல் தொடர்பானது. (கால நீட்டிப்பு)

மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் அறிவிப்பு 2024.02.14 ஆம் திகதி திறக்கப்படுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது மேலும் கேள்விக்கோரல் 2024.03.07 ஆம் திகதி பி.ப.02.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2024.03.06 ஆம் திகதி பி.ப.03.00 மணி வரை கேள்விக்கோரல் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. மேலதிக விபரங்களை எமது அதிகாரப்பூர்வ இணையதளம் மூலமாக **(www.cfhc.gov.lk)** பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.

SELACINE

---

## பொது அறிவித்தல்

2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) பிரிவின் கீழ் 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242(1)ம் பிரிவின் கீழ் ட்ரென்டெக்ஸ் (பிரைவட்) லிமிடெட் ஆனது ட்ரென்டெக்ஸ் இன்டர்நெஷனல் (பிறைவட்)லிமிட்டட் உடன் ஒன்றிணைக்கப்படுவதுடன் சட்டத்தின் 244(1) பிரிவின் விதிகளுக்கமைய விநியோகிக்கப்படும் ஒன்றிணைப்பு சான்றிதழின் பிரகாரம் 2023 ஓகஸ்ட் 18ம் திகதி முதல் அமுல்படுத்தப்படுகிறது.

**ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர்:**
டிரென்டெக்ஸ் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்ட்

**ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு முகவரி:**
இல. 39, டெரன்ஸ் அவெனியூ. கல்கிசை

**ஒன்றிணைப்பு திகதி:** 18 ஒகஸ்ட் 2023

**கம்பனியின் பதிவு இலக்கம்:** PV10984

**டிரென்டெக்ஸ் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்**
**அசைன்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடட்**
**செயலாளர்கள்.**
05.02.2024

---

## 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.

**காணி அமைச்சின் இலக்கம்: 4-3/18/2020/WS/240**

**எனது இலக்கம்: DIVUD/LND/ACQUI/13/6-2**
**DIVUD/LND/ACQUI/WTR/16**

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்கள் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் ..... ஆம் இலக்க ......... ஆம் திகதிய வர்த்தமானியின் 111ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : வடமேல் |
| மாவட்டம் | : குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : உடுபத்தாவ |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இலக்கம் 1504 - இஹலகம தெற்கு |
| கிராமம் | : இஹலகம |
| வரைபட இலக்கம் | : க.வ. - 421361 |
| வலய இலக்கம் | : 02 |
| தாள் இலக்கம் | : 01 |
| காணித்துண்டு இலக்கம் | : காணித்துண்டு இலக்கம் 01 - 03 வரை |
| பிரமாணம் | : ஹெக்டேயர் - 0.0759 |

**பிரதேச செயலாளர்**
**உடுபத்தாவ**

**உடுபத்தாவ**
**பிரதேச செயலாளர் அலுவலகத்தில்**
**2024 பெப்ரவரி மாதம் 07ந் திகதி**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு
பொது பாதுகாப்பு அமைச்சு
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

## விலைமனு அழைப்பு (IFB)

### ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமையகம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்களில் உள்ள ஆட்பதிவு திணைக்களத்தின் அலகுகளில் ஒரு வருட காலத்திற்கான 16 வழி மற்றும் 24 வழி நெட்வர்க் சுவிட்ச்களுக்கான சேவை வழங்கல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம்

**IFB இலக்கம் : DRP/ACC/07/15/2024**

1. **ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமையகம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்களில் உள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் அலகுகளில் ஒரு வருட காலத்திற்கான 16 வழி மற்றும் 24 வழி நெட்வர்க் சுவிட்ச்களுக்கான சேவை வழங்கல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்திற்கான** விலைமனு கோரல் அழைப்பு ஆட்பதிவு திணைக்களத்தின், திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவர் அவர்களினால் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது
2. விலைமனுக்கோரல் **தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB)** ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது
3. ஆர்வமுள்ள மற்றும் தகுதிவாய்ந்த தரப்பினர் மேலதிக தகவல்களை **கணக்காளர் (கொள்முதல்), ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லை** என்ற முகவரியில் **011 - 5 226 172** என்ற இலக்கத்தில் வேலை நாட்களில், காலை **9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி** வரை பெற்றுக் கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை **13.02.2024 முதல் 04.03.2024 வரை,** நிதிப் பிரிவு, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், பிரிவு சீ, 12வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் இலவசமாகப் பரிசோதிக்கலாம். **(www.drp.gov.lk)**.
4. ஆங்கில மொழியில் உள்ள விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பை, ஆர்வமுள்ள மனுதாரர்கள், கணக்காளர் (கொள்முதல்), ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், பிரிவு சி, 12வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லைக்கு எழுதப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்து வேலை நாட்களில் **காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை. 13.02.2024 முதல் 04.03.2024 வரை ஐந்தாயிரம் ரூபாயை (5,000/-)** திருப்பிச் செலுத்த முடியாத கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும். கட்டணம் செலுத்தும் முறை பணமாக இருக்கும்.
5. விலைமனுக்கள் "அசல்" மற்றும் "நகல்" எனக் குறிக்கப்பட்டு, முத்திரைவைக்கப்பட்ட உரையில் இட்டு, பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது தனிநபர்கள் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், நிதிப் பிரிவு சீ, 12ம் மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, **05.03.2024** அன்று அல்லது அதற்கு முன்னதாக பிற்பகல் **2.00 மணிக்கு** விலை மனு பெட்டியில் இட வேண்டும். விலைமனு சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவிலிருந்து எழுபத்தேழு **(77) நாட்கள்** வரை செல்லுபடியாகும் அல்லது வாங்குபவரால் நிர்ணயிக்கப்பட்ட நீட்டிக்கப்பட்ட தேதி. தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். மனு முடிந்தவுடன், மனுதாரர்கள் அல்லது கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விரைவில் திறக்கப்படும்.
6. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB எண் ஏலத்தின் உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அனைத்து விலை மனுக்களும் இலங்கையில் இயங்கும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் ஒரு இலட்சத்து **இருபதாயிரம் ரூபாய் (120,000/=)** விலைமனு பாதுகாப்புடன் இணைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
திணைக்கள கொள்முதல் குழு,
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்,
12ம் மாடி, "சுவஹுருபாய",
ஸ்ரீ சுபுதிபுர வீதி,
பத்தரமுல்ல.

SELACINE

---

## விவசாயத் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

# பெறுகை அறிவித்தல்

### கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் விடயம் தொடர்பான கேள்வி கோரப்படுகின்றது.

| S No | Bid NO | Details | Qty | Bid Security Amount | Non Refundable fee Rs | Bid Security Validity Period | Programme |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | GOSL/EP/25/ PRO/Agri. Solar/2024-01 | Solar Modules with Mounting | 20 | 300,000.00 | 3,000.00 | 2024.06.17 | CRIWMP |
| 02 | | Solar - Powered Submersible water pump with accessories | 20 | | | | |

1. பெறுகை ஆவணங்களினை 13.02.2024 ஆம் திகதியிலிருந்து 04.03.2024 ஆம் திகதிவரை அலுவலக நேரத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணிவரை திருகோணமலை கன்னியாவீதி, வரோதய நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். இதற்காக இலங்கை வங்கி திருகோணமலை பிரதான கிளையில் (கிளை இல.006) மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம், என்ற பெயரில் கணக்கு இலக்கம் 0005849161 இற்கு மீளச்செலுத்த முடியாத வைப்புப் பணமாக ரூபா.3,000.00 இனை ஆவணத்திற்குச் செலுத்த வேண்டும்.
2. பெறுகை ஆவணங்களை மூடப்பட்ட உறையிலிட்டு 05.03.2024ஆம் திகதி முப 10.30மணிக்கு முதல் கிடைப்பதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விவசாயத்திணைக்களம், கிழக்கு மாகாணம், கன்னியாவீதி, வரோதய நகர், திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் பெறுகை ஆவணத்தின் உறையின் இடதுபக்க மூலையில் பெறுகை இலக்கத்தினை குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.
3. உரிய நேரத்திற்கு பின் உடனே(05.03.2024) மு. ப. 10.30 மணிக்கு பெறுகை ஆவணங்கள் திருகோணமலை கன்னியாவீதி, வரோதய நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் திறக்கப்படும். இதற்காக பெறுகைதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றமுடியும்.
4. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப் பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுக் கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. மேலதிக விபரங்களை கன்னியாவீதி, வரோதய நகர், திருகோணமலை கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தில், மாகாணப் பணிப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

தொலைபேசி : 026-2222665/ 026-2223077
தொலைநகல் : 026-2222153

**M.S.A.கலீஸ்,**
**மாகாணப் பணிப்பாளர்,**
**விவசாயத் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**கன்னியாவீதி, வரோதய நகர்,**
**திருகோணமலை.**

---

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# ஒருநாளில் நீக்கப்பட்ட தசுன் ஷானக்க இலங்கையின் டி20 குழாத்தில் நீடிப்பு

இலங்கை ஒருநாள் குழாத்தில் இடம் கிடைக்காத முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க, ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டி20 தொடருக்கான 16 பேர் கொண்ட இலங்கை அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக தற்போது ஒருநாள் தொடரில் ஆடிவரும் இலங்கை அணி அடுத்து மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் ஆடவுள்ளது. இதற்கான உத்தேச அணி விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் தசுன் ஷானக்க மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார். அண்மைக் காலமாக சோபிக்கத் தவறிவரும் தசுன், ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு பதில் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன அழைக்கப்பட்டார்.

இலங்கை மற்றும் ஆப்கான் அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் 155 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை அணி தொடரை 2–0 என கைப்பற்றிய நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை (14) அதே பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளது.



இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் மோதும் டி20 தொடர் எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதன் இரண்டு மற்றும் மூன்றாவது போட்டிகள் பெப்ரவரி 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அனைத்து போட்டிகளும் தம்புள்ளையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்காக நேற்று (12) அறிவிக்கப்பட்ட வனிந்து ஹசரங்க தலைமையிலான இலங்கை குழாத்தில் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர இணைக்கப்பட்டிருந்தபோதும் தற்போதை உபாதைக்கு உள்ளாகி இருக்கும் நிலையில் அவருக்கு பதில் பினுர பெர்னாண்டோ அழைக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியின் போது காலில் உபாதைக்கு உள்ளான துஷ்மன்த சமீர ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு பதில் அசித்த பெர்னாண்டோ அணிக்கு அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இலங்கை குழாம்: வனிந்து ஹசரங்க (தலைவர்), சரித் அசலங்க (உப தலைவர்), பத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, குசல் ஜனித் பெரேரா, அஞ்சலோ மத்தியூஸ், தசுன் ஷானக்க, மஹீஷ் தீக்ஷன, பினுர பெர்னாண்டோ, மதீஷ பதிரண, டில்ஷான் மதுஷங்க, நுவன் துஷார, அக்கில தனஞ்சய, கமிந்து மெண்டிஸ், சதீர சமரவிக்ரம.**

# ரினோன், சிட்டி, விக்டரி அணிகள் இலகு வெற்றி

*பிரின்ஸ் குணசேகர*



19 வயதுக்கு உட்பட்ட யூசுப் கிண்ண கால்பந்து தொடரின் ஆரம்ப போட்டிகளில் ரினோன், கொழும்பு சிட்டி மற்றும் விக்டரி கால்பந்து அணிகள் வெற்றியீட்டியதோடு சோண்டர்ஸ் மற்றும் பிளக்ஸ்வெயார் அணிகளுக்கு இடையிலான போட்டி 1–1 என்ற கோல்களால் சமநிலை பெற்றது.

கொழும்பு சிட்டி கால்பந்து மைதானத்தில் வார இறுதியில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ரினோன் அணி 3–0 என்ற கோல்களால் கொள்ளுப்பிட்டி யுனைடட் அணியை வீழ்த்தியதோடு கொழும்பு சிட்டி அணி, யங் சில்வர் அணியை 3–0 என்ற கோல்களால் தோற்கடித்தது. இதில் மொரகஸ்முல்ல அணியை எதிர்கொண்ட விக்டரி அணி 1–0 என்ற கோல் கணக்கில் வென்றது.

16 அணிகள் பங்கேற்றிருக்கும் இந்தத் தொடரில் கடந்த இரு முறைகளும் சம்பியன் கிண்ணத்தை வென்ற ஜாவாலேன் அணி அடுத்த வாரம் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக சாதனை மரதன் வீரர் கிப்டுன் உயிரிழப்பு




ஆடவர் மரதன் ஓட்டப்போட்டியில் உலக சாதனை படைத்துள்ள கென்யாவின் 24 வயது கெல்வின் கிப்டுன் வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மேற்குக் கென்யாவில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற வீதி விபத்தில் அவருடன் அவரது பயிற்சியாளரான ருவண்டா நாட்டின் கர்வைஸ் ஹகிசமானாவும் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு சிக்காகோவில் நடைபெற்ற நெடுந்தூர ஓட்டத்தில் 42 கிலோ மீற்றர் தூரத்தை ஒரு மணி மற்றும் 35 விநாடிகளில் பூர்த்தி செய்து கிப்டுன் உலக சாதனை படைத்திருந்தார். இந்த ஆண்டு பிற்பகுதியில் நடைபெறவுள்ள பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கான மரதன் அணியில் அவர் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

# கூட்டணி அரசை நெருங்கும் நவாஸ்



பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களை பிடித்த முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் மற்றும் பிலாவல் பூட்டோ சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு திட்டமிடுவதாக அறிவித்துள்ளன.

இந்தத் தேர்தலில் தற்போது சிறை அனுபவிக்கும் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆதரவு சுயேச்சை வேட்பாளர்கள் முதலிடத்தை பிடித்த நிலையிலேயே இவர்கள் கூட்டணி அரசொன்றை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளனர்.

இம்ரான் கான் கட்சிக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்ட நிலையிலேயே அவரின் ஆதரவாளர்கள் இந்தத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டனர். இந்நிலையில் தேர்தல் மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பில் இம்ரான் கான் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தலின் இறுதி முடிவு நேற்று முன்தினமே வெளியான நிலையில் சுயேச்சை வேட்பாளர்கள் அதிகபட்சமாக 101 இடங்களில் வென்றனர். இவர்களில் 93 பேர் இம்ரான் கான் ஆதரவாளர்களாவர்.

இதனை அடுத்து நவாஷ் ஹரீப் கட்சி 75 இடங்களையும் பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களையும் வென்றன. இந்த இரு கட்சிகளும் கூட்டணி சேர்ந்தே 2022 இல் இம்ரான் கார் அரசை பதவி நீக்கியமை குறிப்பிடத்தக்கது.

நவாஸ் ஷரீபுக்கு பாகிஸ்தானின் பலம்மிக்க இராணுவத்தின் ஆதரவு இருந்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

# கால்பந்து போட்டியில் மின்னல் தாக்கி வீரர் பலி



இந்தோனேசியாவில் கால்பந்து போட்டி ஒன்றின் போது வீரர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

மேற்கு ஜாவாவில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தப் போட்டியின்போது 34 வயது வீரர் மீது மின்னல் தாக்கும் தருணம் வீடியோவில் பதிவாகியுள்ளது.

மின்னல் தாக்கிய உடன் கீழே விழுந்த அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும் முன்னரே உயிரிழந்துவிட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தோனேசியாவில் கால்பந்து போட்டி ஒன்றில் கடந்த 12 மாதங்களில் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெறுவது இது இரண்டாவது முறையாகும். கடந்த ஆண்டு 13 வயதுக்கு உட்பட்ட கால்பந்து போட்டி ஒன்றிலும் இளம் வீரர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

# ரபாவில் இஸ்ரேலின் சரமாரித் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் பலி

## 2 பணயக்கைதிகளை விடுவித்ததாக இஸ்ரேல் அறிவிப்பு





எகிப்துடனான காசாவின் எல்லை நகரான ரபாவில் இருந்து இரு பணயக்கைதிகளை மீட்டதாக இஸ்ரேல் கூறியிருக்கும் நிலையில் அந்த நகர் மீது நடத்தப்பட்ட உக்கிர வான் தாக்குதல்களில் சிறுவர்கள் உட்பட 100க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசாவில் இஸ்ரேல் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக நடத்தும் தாக்குதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா நகர் மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டு வருகிறது.

இந்தத் தாக்குதல் திட்டத்திற்கு உதவிக் குழுக்கள் மற்றும் இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்க உட்பட வெளிநாட்டு அரசுகள் கடும் கவலையை வெளியிட்டு வருகின்றன. ரபா நகர் அபாயகரமான மனிதாபிமான நிலைமைய எதிர்கொண்டிருக்கும் நிலையில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்துவது பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவம் மற்றும் பொலிஸ் கூட்டு நடவடிக்கையில் சுமார் 130 நாட்களாக பிடிக்கப்பட்டிருந்த இரு பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று (12) காலை அறிவித்தது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலின்போது கடத்திச் செல்லப்பட்ட பெர்னாண்டோ சிமொன் மர்மன் மற்றும் லுவிஸ் ஹார் ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறியது. இருவரும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

“இராணுவம் மற்றும் ஷின் பெட் (இஸ்ரேலிய பாதுகாப்பு நிறுவனம்) நீண்ட காலமாக இந்த நடவடிக்கையில் பணியாற்றி வந்தன. அதனை மேற்கொள்வதற்கு சரியான நேரம் வரை அவர்கள் காத்திருந்தனர்” என்று இராணுவ பேச்சாளர் டனியேல் ஹகரி தெரிவித்துள்ளார்.

இந்த பணயக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கட்டடத்தில் இருந்து அவர்கள் அழைத்துச் செல்லப்படும்போது துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட ஹகரி, துப்பாக்கிச் சூடு நடத்தப்படும் அருகில் உள்ள கட்டடங்கள் மீது வான் தாக்குதல்கள் நடத்தியதாகவும் கூறினார்.

எனினும் கடந்த ஞாயிறு இரவு தொடக்கம் இஸ்ரேல் ரபா நகரில் குண்டு மழை பொழிந்ததாக அங்கிருப்போர் விபரித்துள்ளனர். இதன்போது 14 வீடுகள் மற்றும் மூன்று பள்ளிவாசல்கள் தாக்கி அளிக்கப்பட்டதாக பலஸ்தீன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் பள்ளிவாசல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 63 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அங்கிருக்கும் அல் ஜசீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் காசா சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் ரபா நகரில் கடந்த 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 100க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களை அடுத்து நகரில் இருந்து கரும்புகை வெளிவந்த வண்ணம் இருந்ததாக அங்கிருக்கும் செய்தியாளர்கள் விபரித்துள்ளனர்.

**உயிரிழப்பு 28,340 ஆக உயர்வு**

இந்நிலையில் ரபா மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதலைத் தொடுத்தால் காசாவில் தம்மிடம் எஞ்சி இருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அது சிதறடிக்கும் என்று ஹமாஸ் அமைப்பு எச்சரித்துள்ளது.

காசாவில் தொடர்ந்து 130 பணயக்கைதிகள் பிடித்து வைக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் நம்புகிறது. இவர்களில் உயிரிழந்த 29 பேரின் உடல்களும் அடங்கும். இதனையொட்டி போர் நிறுத்தம் ஒன்றுக்கான புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இஸ்ரேல் அண்மைய நாட்களில் நடத்திய தாக்குதல்களில் இரு பணயக்கைதிகள் கொல்லப்பட்டு மேலும் எட்டுப் பேர் காயமடைந்ததாக ஹமாஸ் ஆயுதப் பிரிவை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் ஒப்பீட்டளவில் பாதுகாப்பான இடமாக உள்ள ரபா மீதான தரை வழித் தாக்குதல் பாரிய உயிரிழப்புகளுக்கு காரணமாகும் என்று உதவி நிறுவனங்கள் தொடர்ச்சியாக எச்சரித்து வருகின்றன.

சுமார் 1.4 மில்லியன் பலஸ்தீனர்கள் அல்லது காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் தற்போது ரபா நகரில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

ரபா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை கண்டித்திருக்கும் ஹமாஸ் அமைப்பு, எமது மக்கள் மீது படுகொலைகளின் எல்லையை விரிவுபடுத்தி வருவதாகவும் விபரித்துள்ளது.

ரபாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் சுமார் 1 மில்லியன் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முறையான திட்டம் ஒன்று இன்றி ரபாவில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளக் கூடாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஞாயிற்றுக்கிழமை (11) கூறியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதன்போது இரு தலைவர்களும் 45 நிமிடங்கள் பேசியுள்ளனர். காசா மீதான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை மிதமிஞ்சி இருப்பதாகவும் அங்கு பொதுமக்களின் உயிரிழப்புகள் பெரும் கவலை அளிப்பதாக உள்ளதாகவும் ஜோ பைடன் அண்மையில் கூறிய நிலையிலேயே அவர் நெதன்யாகுவுடன் பேசியுள்ளார்.

எனினும் அமெரிக்க தொலைக்காட்சியான ஏ.பி.சி. நியூஸ் நிறுவனத்திற்கு பேட்டியளித்த நெதன்யாகு, ஹமாஸ் ஒழிக்கப்படும் வரை ரபா நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அங்குள்ள பொதுமக்கள் வெளியேற விரும்பினால் பாதுகாப்பான பாதை ஏற்படுத்தப்படும் என்றும் கூறி இருந்தார்.

அவர்கள் எங்கே போவார்கள் என்று நெதன்யாகுவிடம் கேட்டபோது, “உங்களுக்குத் தெரியும், ரபாவின் வடக்கே நாங்கள் விடுவித்த ஏராளமான பகுதிகள் உள்ளன. ஆனால், நாங்கள் விரிவான திட்டம் ஒன்றை வகுத்து வருகிறோம்” என்றார்.

ஏற்கனவே வடக்கு காசா மற்றும் தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்களை அடுத்தே அங்கிருந்த பலஸ்தீனர்கள் ரபா வரை துரத்தப்பட்டனர். இதில் பலரும் பல தடவைகள் இடம்பெயர்ந்தே ரபா நகரை அடைந்துள்ளனர். கடந்த நான்கு மாதங்களில் ஆறு தடவைகள் இடம்பெயர்ந்து தற்போது ரபாவில் தனது உறவினரின் வீட்டில் அடைக்கலம் பெற்றிருக்கும் இரு குழந்தைகளின் தாயான கதா எல் குத்ர், ரபாவில் இருந்தும் வெளியேற வேண்டிய நேரம் வந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

“நேற்றிரவு (11) அதிகாலை 01.00 மணிக்கு இராணுவ நடவடிக்கை ஒன்றை இஸ்ரேல் நடத்தியது” என்று ‘பி.பி.சி. ரேடியோ போர்’ வானொலிக்கு குறிப்பிட்டுள்ளார்.

“அவர்கள் பல பலஸ்தீனர்களை கொன்றார்கள். சரியாக நாம் வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்தோம். என்றாலும் முடியுமான விரைவில் ரபாவில் இருந்து வெளியேறுவதற்கான சமிக்ஞை ஒன்றாகவே இது உள்ளது. ஏனென்றால் கான் யூனிஸ் மற்றும் காசா நகர் என மற்ற நகரங்களிலும் இதே சூழல் தான் இருந்தது.

எனவே நாம் மீண்டும் ஒருமுறை ரபாவில் இருந்து வெளியேற திட்டமிட்டிருக்கிறோம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆளில்லா விமானங்கள் மற்றும் விமானங்களின் சத்தம் கேட்பதாகவும் வெளியேற்றத்திற்கான திட்டம் அறிவிக்கப்படும் வரை காத்திருப்பதாகவும் குத்ர தெரிவித்தார்.

“வழக்கமாக எங்கே செல்ல வேண்டும் என்பது பற்றி அவர்கள் துண்டுப் பிரசுரங்களை எறிந்தும் சமூக ஊடகங்களில் பதிவிட்டும் தெரிவிப்பார்கள். எனவே நாம் அதற்காக காத்திருக்கிறோம்” என்றும் அவர் கூறினார்.

இதேவேளை காசாவின் ஏனைய பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. மத்திய காசா பகுதியில் இருக்கும் டெயிர் அல் பலாஹ் நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் போர் விமானம் நேற்று நடத்திய வான் தாக்குதலில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர்.

காசாவில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 28,340 ஆக அதிகரித்துள்ளது. இதில் 67,984 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசா பகுதியில் உள்ள குடும்பங்கள் மீது இஸ்ரேலியப் படை நடத்திய 19 படுகொலைச் சம்பவங்களில் கடந்த 24 மணி நேரத்தில் 164 பேர் கொல்லப்பட்டு மேலும் 240 பேர் காயமடைந்திருப்பதாக அந்த அமைச்சு டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.